Registered as a News Paper   பக்கங்கள் 08   விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   மாசி 09   (21-02-1992)   வெள்ளிக்கிழமை   ஓசை: 03

## இல. மாணவர்களுக்கு அவுஸ். புலமைப்பரிசில்

புதிய புலமைப் பரிசில் திட்டமொன்றின் கீழ் அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக விரைவில் இலங்கை மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜோன் குறோபேட் என்ற புகழ்மிக்க அவுஸ்திரேலிய கல்விமான் பெயரால் இந்த அவுஸ்திரேலிய புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் என்று, மும்மொழிகளிலும் இதற் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் புதிய தந்திரோபாயம்; சிறிலங்கா இராணுவம் குழப்பம்



(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டை முழுமையாகவே கைப்பற்றும் எண்ணத்துடன் தன்னை தயார்படுத்தி வரும் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தலைவர் வே. பிரபாகரன் புதிய போருபாயத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளார் என விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' குறிப்பிட்டுள்ளது.

சூழ்நிலைக் கேற்றவாறு இப்போர்த் தந்திரத்தினை தலைவர் பிரபாகரன் தயாரித்து உருவம் கொடுத்துள்ளார். இவ்வாறாக வகுக்கப்பட்ட போர்த் தந்திரம், சிறிலங்கா இராணுவத்திற்குபெரும்இக்கட்டான ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அவர்களது போர் (8ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிக்கொமாண்டோக்கள் மான்தீவில் மின்வேக அதிரடி

## பல இராணுவம் பலி; கடற் புலிகள் வீரசாதனை

கடற்புலிகளின் விசேட அதிரடிப் பிரிவினர் (கொமாண்டோக்கள்) மான்தீவில் நடத்திய மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நேற்று அதிகாலை படகுகளில் சென்ற கடற்புலிகளின் கொமாண்டோக்களே இந்த அதிரடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினர்.

இத் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து பல ரக ஆயுதங்களும் இறந்த நான்கு இராணுவத்தினரின் சடலங்களும் கடற்புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் கடற்புலிக் கொமாண்டோக்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு அரியாலைப் பகுதிக்கும். கல்முனைக்கும் இடையில் மான்தீவு உள்ளது. நேற்று அதிகாலை 2-00 மணியளவில் படகுகளில் அத்தீவை அடைந்த கடற்புலிகொமாண்டோக்கள் மின்னல் வேகத்தில் இத்தாக்குதலை நடத்தி முடித்தனர்.

கடற்புலிகளின் அதிரடிப் பிரிவினர் மேற்கொண்ட இத்தாக்குதல் இராணுவரீதியில் குறிப்பிடக்கூடிய ஒரு மைல்கல் எனத் தெரிவிக்கப்பட்டது

## ஆயுதங்கள், சடலங்கள்; கடற் புலிகள் கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)

மான்தீவுப்பகுதியில் நேற்று அதிகாலை கடற்புலிகளின்

- ★ தொடர் ரவைகள் - 450
- ★ நடுத்தர ரவைகள் - 800
- ★ ரி - 56 ரக மகசின் - 24
- ★ நீண்டவாள் - 01

## உழவு இயந்திரத்தை ஆவணம் காட்டிப்பெறவும்

(யாழ்ப்பாணம்)

தேசவிரோதி முருகேசு தர்மராஜன் என்பவருக்கு சிறிலங்கா இராணுவத்தால் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு கிளிநொச்சி பிரதேச காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆவணங்களுடன் கிளிநொச்சி பிரதேச காரியாலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உழவுஇயந்திரத்தின், இயந்திர இலக்கம் 3711164191 J3 அடிச்சட்டஇலக்கம் 1867505 M5AU

## வவு. தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியாவின் எல்லைப்புற தமிழ்க்கிராமங்களில் சிங்களவரைக் குடியேற்ற சிறிலங்கா அரசு முயற்சித்துவருகிறது. ஏற்கனவே இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள நெளுக்குளம் உட்பட 6 கிராமங்களில் தற்போது சிங்களவரும், முஸ்லிம்களும் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதைத்தவிர செட்டிகுளம், குருமன்காடு, நெடுங்குளம், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், வையாபுரிக்குளம், நேரியகுளம் ஆகிய பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் இறங்கியுள்ளனர்.

இப்போது நிலைகொண் [8 ஆம் பக்கம் பார்க்க]

புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் என்று, மும்மொழி களிலும் இதற் (8 ஆம் பக்கம் பார்க்க)

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | மாசி 09 | (21-02-1992) | வெள்ளிக்கிழமை | ஓசை: 03

# தலைவர் பிரபாவின் புதிய தந்திரோபாயம்; சிறிலங்கா இராணுவம் குழப்பம்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டை முழுமையாகவே கைப்பற்றும் எண்ணத்துடன் தன்னை தயார்படுத்தி வரும் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தலைவர் வே. பிரபாகரன் புதிய போருபாயத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளார் என விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' குறிப்பிட்டுள்ளது.

சூழ்நிலைக் கேற்றவாறு இப்போர்த் தந்திரத்தினை தலைவர் பிரபாகரன் தயாரித்து உருவம் கொடுத்துள்ளார். இவ்வாறாக வகுக்கப்பட்ட போர்த் தந்திரம், சிறிலங்கா இராணுவத்திற்குபெரும்இக்கட்டான ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அவர்களது போர்

(8ஆம் பக்கம் பார்க்க)



# கடற்புலிக்கொமாண்டோக்கள் மான்தீவில் மின்வேக அதிரடி

## பல இராணுவம் பலி; கடற் புலிகள் வீரசாதனை

கடற்புலிகளின் விசேட அதிரடிப் பிரிவினர் (கொமாண்டோக்கள்) மான்தீவில் நடத்திய மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நேற்று அதிகாலை படகுகளில் சென்ற கடற்புலிகளின் கொமாண்டோக்களே இந்த அதிரடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினர்.

இத் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து பல ரக ஆயுதங்களும் இறந்த நான்கு இராணுவத்தினரின் சடலங்களும் கடற்புலிகளினால கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் கடற்புலிக் கொமாண்டோக்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு அரியாலைப் பகுதிக்கும். கல்முனைக்கும் இடையில் மான்தீவு உள்ளது. நேற்று அதிகாலை 2-00 மணியளவில் படகுகளில் அத்தீவை அடைந்த கடற்புலிகொமாண்டோக்கள் மின்னல் வேகத்தில் இத்தாக்குதலை நடத்தி முடித்தனர்.

கடற்புலிகளின் அதிரடிப் பிரிவினர் மேற்கொண்ட இத்தாக்குதல் இராணுவரீதியில் குறிப்பிடக்கூடிய ஒரு மைல் கல் எனத் தெரிவிக்கப்பட்டது

## ஆயுதங்கள், சடலங்கள்; கடற் புலிகள் கைப்பற்றினர்


(யாழ்ப்பாணம்)

மான்தீவுப்பகுதியில் நேற்று அதிகாலை கடற்புலிகளின் கொமாண்டோப்பிரிவினரால் நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில்கைப்பற்றப்பட்ட 4 இராணுவத்தினரின் சடலங்களும் அவர்களிடமிருந்துகைப்பற்றப்பட்ட நவீனரக ஆயுதங்களும் குருநகர்ப்பகுதியிலுள்ள கடற்புலிகளின் பிரதேச காரியாலயத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுபகல் 1.30 மணிவரை இவற்றை பெருந்தொகையானமக்கள் பார்வையிட்டுச் சென்றனர்.

இந்த வெற்றிகர அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல். எம். ஜி - 01
★ ரி - 56 - 2 - 03
★ ரி - 56 - 03
★ ஜே. ஆர். கைக்குண்டு - 08
★ தொடர் ரவைகள் - 450
★ நடுத்தர ரவைகள் - 800
★ ரி - 56 ரக மகசின் - 24
★ நீண்டவாள் - 01



## உழவு இயந்திரத்தை ஆவணம் காட்டிப்பெறவும்

(யாழ்ப்பாணம்)

தேசவிரோதி முருகேசு தர்மராஜன் என்பவருக்கு சிறிலங்கா இராணுவத்தால் வழங்கப்பட்ட உழவு இயந்திரம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு கிளிநொச்சி பிரதேச காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் தகுந்த ஆவணங்களுடன் கிளிநொச்சி பிரதேச காரியாலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். உழவுஇயந்திரத்தின், இயந்திர இலக்கம் 3711164191 J3 அடிச்சட்டஇலக்கம் 1867505 M5AU

## வவு. தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றம்

(வவுனியா)

வவுனியாவின் எல்லைப்புற தமிழ்க்கிராமங்களில் சிங்களவரைக் குடியேற்ற சிறிலங்கா அரசு முயற்சித்துவருகிறது. ஏற்கனவே இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள நெளுக்குளம் உட்பட 6 கிராமங்களில் தற்போது சிங்களவரும், முஸ்லிம்களும் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதைத்தவிர செட்டிகுளம், குருமன்காடு, நெடுங்குளம், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், வையாபுரிக் குளம், நேரியகுளம் ஆகிய பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் இறங்கியுள்ளனர்.

இப்போது நிலை கொண்

[8 ஆம் பக்கம் பார்க்க]


## போக்குவரத்து விதிகள் பாடசாலைகளில் பாடமாகும்

பாடசாலைமாணவர்களுக்கு போக்குவரத்து விதிகளை ஒரு பாடமாக கற்பிக்க கல்வி அமைச்சு இணங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான வீதி விபத்துகளுக்கு போக்கு வரத்து விதிகளைப்பற்றிய அறிவின்மையே காரணமாக இருக்கிறது, எனவே பாடசாலை மாணவர்களுக்கு இந்த விதிகள் பற்றிய பூரண அறிவு ஏற்படுத்தப் படவேண்டும் என தெரிவித்தார்.

## பிறந்த நாள் வாழ்த்து

குரும்பசிட்டி வைத்தியகலாநிதி
பகீரதன் கல்பனா தம்பதிகளின்



செல்வப் புதல்வன்

### பகீரதன் பிரணவன்

இன்று (21.02.92) கண்டியில் தனது முதலாவது பிறந்த நன்னாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வேளையில்,

பிரணவப் பொருளின் பெயருடைப் புதல்வா!
பரமனருள் வேண்டிப் பாரினில் நீயே,
கற்கும் கல்வியாற் சேடிலாச் செல்வமும்
நற்கலை ஞானமும், நாற்றிசைப் புகழுங்
குற்றமிலா வாழ்வும் குறைவிலாது பெற்றிட
நிறயோம் துணையாய், நீவாழி வாழியெனறே!

அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தப்பா,
அம்மப்பா. அம்மம்மா மாமா,
சித்திமார், ஜேர்மன் அம்மாமாமா,
அம்மாமாமி, காயத்திரி.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
21-02-92

(2220)

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர்

தகைமைகள்:

அ) கூ. வே ஆணைக்குழுவின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் / உள்ளகக் கணக்காய்வு பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. வே. ஆ குழுவின் 9ஆவது சம்பளத் திட்டத்தின் உள்ளக கணக்காய்வாளர் / கணக்கியற் பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாதஅனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய சாம்ராஜ்ய கல்விநிலையத்தில் கணக்குபதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்திபடைந்த கணக்கியல் பகுதியில் 4 வருடங்கள் மேற்பார்வை செய்த அனுபவங்கள் அல்லது வர்த்தக நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் எண்பார்வை செய்த அனுபவம்.

அல்லது

இ) கூ வேலையாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) சித்தி / க. பொ. த. உயர்தரம் கணக்கியல் பாடத்துடன் மூன்று பாடங்களில் சித்தியுடன் வெளிக்கள கணக்கியல் / எண்பார்வை பகுதியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பள அளவுத்திட்டம்:
104,7 09 1165-60x 3-75x 11 2170/-

குறிப்பு:- விண்ணப்பங்கள்யாவும் 01.03.92-ம் திகதிக்கு முன்னதாக தலைவர் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி, என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

கட்டைவேலி- நெல்லியடி,
ப. நோ கூ. சங்கம்,
கரவெட்டி.

(சி 3949)

### வரி விளம்பரம்

**ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH**

3 மாத ஆங்கிலப் பயிற்சி வருகிற ஞாயிறு ஆங்கில விரிவுரையாளர் கந்தசாமியினால் ஆரம்பிக்கப்படுகிறது V. N. Kandasamy A. I. B. Part I. (London) Inter (London) 8/, கொக்குவில், திருநெல்வேலி றோட், கொக்குவில். (2224)

**சோதிடம்**

ஜாதகம் எழுத, குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, திருமணப் பொருத்தம்பார்க்க, வேலணை சோதிடர் V.A. சிவராசா 152 அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2225)

### விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்க அனுமதி

[சாவகச்சேரி]

சாவகச்சேரிமகளிர்மகாவித்தியாலயத்தில்கல்விப்பொதுத் தராதர உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கு கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது மேற்படிபாடசாலை அதிபரினதும், அபிவிருத்தி சங்க உறுப்பினர்களினதும் பெருமுயற்சியினாலேயே இவ் அனுமதி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக் கிழமை தோறும்இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு வரும் ஞாயிற்றுக்கிழமை 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட் போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்வார அமர்வில் திரு. சாந்தன் அவர்கள் ''எழுத்துலகில் என்பாதை'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார் என்றும், அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் படியும் மேற்படி கழகம் கேட்டுள்ளது.

### பிற் போடப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தும் பேச்சுப் போட்டியின் முடிவு திகதி பிற்போடப்பட்டுள்ளது என்று சம்மேளனச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி பின்னர் அறிவிக்கப்படும். (24)

### இந்தியாவில் புலமைப் பரிசில்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பெற்று இந்தியாவில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களை கல்வி உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

க.பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், இதற்கானஅறிவித்தல் கடந்த 14 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது என்றும், வரும் 28 ஆம் திகதிக்குள் இவ் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1979.03.06
மறைவு:
1992.01.22
திதி: திருதியை

### செல்விசிவயோகநாதன்சிவந்தினி (சிவா)

பருத்தித்துறை வடஇந்து மகளிர்கல்லூரி
8ஆம் ஆண்டு மாணவி

வைத்தியசாலையில் உதவிபுரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

திரு. க. சிவயோகநாதன்
குடும்பத்தினர்.

(2213)

## 1-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
16-11-1974
விண்ணில்
21-02-1991
திதி: 21-02-1992

### 2ஆம் லெப். புஸ்பராசா
(தியாகராஜா அகிலன்)

கலை திகழ் உள்ளம் காவியமானதோ
களங்கமற்ற உன்முகமும் காற்றாய்ப் பறந்ததோ
வாழ்வுதனில் ஒளியென மிளிர்ந்தாயே
வாழ்வையே தியாகம் செய்தாயே
வீழ்ந்ததுவே உன் அழகுமேனி
வீரச்சாவே நின் புகழ் சொல்லுதடா
காவியம் படைத்து விட்ட நீ
காலத்தால் அழியாத சின்னமடா
ஆண்டொன்று சென்றதடா
ஆறாத் துயரில் வாடுகின்றோம்!

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
(2222)

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி
மற்றும் குடும்பத்தினர்.

## நினைவு கூருகின்றோம்

1992-02-21

1986ஆம் ஆண்டு இதேதினத்தில்
காங்கேசன்துறை ஊறணிப் பகுதியில்
சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட
பொதுமகன்


1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
**புஷ்பராசா** (தியாகராசா அகிலன் - நீர்வேலி)

கித்துள் பகுதியில் சிறிலங்காப் படையினரின்
துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய
**மணி** (பிலிப் அந்தோனி - சொறிக்கல்முனை)

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான
மோதலில் வீரச்சாவெய்திய
**தர்சன்** (ஆண்டி ஜீவா-பெரியகடை, திருக்கோணமலை)

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி/3948)




புலேந்திரன் - குமரப்பா முதலான போராளிகள் இலங்கை - இந்திய கூட்டுச் சதிக்குப் பலியானதைத் தொடர்ந்து 'இனி யுத்த நிறுத்தம் இல்லை' என தலைவர் பிரபாகரன் அறிவித்தார். இதனைத்தொடர்ந்து மட்டக்களப்பில் ஒரு கண்ணி வெடித் தாக்குதல் இடம் பெற்றது. இலங்கை மக்களின் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்டதாக கூறப்படும் இலங்கை இராணுவம் இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் உலா வருகையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்திய இராணுவத்தினரின் வாகனங்களை தவிர்த்து இலங்கை இராணுவத்தை குறிவைத்து மிக துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்' என லண்டன் பி. பி. சி. வர்ணித்தது. இந்த வர்ணனை அக்காலத்தில் பிரபலமாக இருந்தது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான நிமால் டி சில்வாவுடன் 9 இராணுவத்தினரும் பலியாகினர் அவ்வளவு திறமையான இத்தாக்குதலையேற்கொண்டவன் தான் மேஜர் அகத்தியர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி ஆறு என சிறப்பாகக் குறிப்பிடப்படும் கோட்டைக்கல்லாறுப் பகுதியைச் சேர்ந்த இவன் 1984ஆம் ஆண்டு புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டான். விடுதலைப்புலிகளின் ஐந்தாவது முகாமில் பயிற்சி பெற்றுக்கொண்ட இவன் மருத்துவக் குழுவினருக்கான விசேட பயிற்சியையும் மேலதிகமாகப் பெற்றுக்கொண்டான். மீண்டும் இந்த மண்ணில் அவன் மருத்துவனாக காலடி எடுத்து வைத்தாலும் திறமை மிக்க ஒரு போராட்ட வீரனாகவே இனங்காணப்பட்டான். அதனாலே தான் அபாயகரமான பகுதிகள் எனக் கருதப்படும் பகுதிகளில் நடத்த உத்தேசிக்கப்படும் தாக்குதல்கள் இவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை அம்பலத்தடி சந்தி எமது போராளிகளில் கணிசமான பேரை பலிகொண்ட இடமாகும். ஏனெனில் இப்பகுதியில் இருந்தே எமது பயிற்சி முகாம்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுவதுண்டு. எனவே இப்பாதை மீது சிறிலங்காப்படையினருக்கு எப்போதுமே குறியிருக்கும். இப்பகுதியில் துப்பாக்கிச் சன்னத்தைக்காணாத சுவர்களே இல்லை எனலாம். ஆனால் இந்த அபாயகரமான பாதையில் சண்டையிடத்தான் இவனுக்கு விருப்பம் தன்னைப் போலவே ஏனைய போராளிகளையும் உருவாக்கினான். ஒரு கட்டுப்பாடான ஒழுக்கமான போராளியால்தான் ஒரு சிறந்த தலைமையை அளிக்க முடியும். எனவே கட்டுப்பாடு ஒழுக்கம் என்பனவற்றில் நாம் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என அறிவுறுத்துவான்.

மட்டக்களப்பு படுவான்கரைப்பகுதியைப் பற்றி போராளிகள் குறிப்பிடும் போது 'ஓடினா வெளி, விழுந்தா வெளி' என்று குறிப்பிடுவார்கள். அப்படியான இயற்கை அமைப்பைக் கொண்ட அந்தப் பிரதேசத்தின் பொறுப்பாளனாக இவன் நியமிக்கப்பட்ட காலத்தில் இவன் எவ்வாறு போராளிகளைக் காப்பாற்றினான் என்பதை அறியும்போது ஒவ்வொருவர் நெஞ்சும் புல்லரிக்கும்.

மட்டக்களப்பில் இருந்து வளைந்து நீண்டு வரும் அந்த வாவிக் கரையில் தொம்பலும் (சேறு) கன்னாப்பற்றைகளும் ஒட்டு என்றழைக்கப்படும் தாவரங்களும் நிறைந்திருக்கும் இப்பகுதிக்குள் இடுப்பளவு தண்ணீருக்குள்ளும் அதற்கு மேலும் இந்தப் பற்றைகளிடையே தடிகளினால் பரண் அமைத்து அவற்றையே முகாமாக்கி இருந்தான். தேசத்துரோகிகள். எமது காற்றையே அசுத்தப்படுத்தும் வகையில் நிறைந்திருக்கும் இந்தியப் படையினர் இவர்களின் பார்வையில் படாது அந்த வயல் வெளிகளைக் கடந்து குளிர், நுளம்புத்தொல்லை மிகுந்த இந்த நீர்நிலை முகாம்களுக்குச் செல்வதென்றால் அதற்கு எவ்வளவு கவனம் வேண்டும். இந்த முகாம்களில் இருந்தே ஏனைய இடங்களுடன் தகவல்தொடர்பு எடுக்க வேண்டும். தொலை தொடர்புச்கருவிக்கு பற்றறி கொண்டு செல்வதென்றால் கூட இலேசானதல்ல. ஆனால் இவன் அதையெல்லாம் செய்து காட்டினான். அங்கிருந்தே தாக்குதலுக்கு திட்டமிட்டான். போராடினான். இதற்கான மக்கள் பலத்தையும் திரட்டினான்.

இதனால்தான் 'புலிகளுக்கு குளிருக்கு போர்வையோ, உணவோ தேவையில்லை ஆயுதங்களை கடலுக்குள் கூட புதைத்து வைத்தனர். இருட்டில் கூட அவற்றைத் தேடி எடுத்தனர் என பம்பாயில் வீக்லி இதழுக்கு பேட்டியளித்தார் இந்தியப்படை எம்மீது போர் தொடுத்த காலத்தில் அதற்குப்பொறுப்பாக இருந்த ஜெனரல் ஹர்கீர்த்சிங் இவன் போன்றோரின் செயற்பாடுகள் எதிரிகளே வியந்துபோற்றும் வரலாற்றை எமக்குப் பெற்றுத்தந்தது.'

இதேபோலவந்தாறுமூலைப் பகுதிக்கு அப்பால் முகாம்கள் அமைக்கும் போது இயற்கையையே போராளிகளுக்கு அரணாக்கித் தந்தான். மலைகளுக்குப் பக்கத்தில் உள்ள குகைகளே பாதுகாப்பு அரண்கள் விமானக்குண்டு வீச்சின் போதும் எறிகணைத் தாக்குதல்களின் போதும் குகைகளுக்குள்ளேயேதனதுவாரிசுகளைப் பாதுகாத்தான். உணவு பெற்றுக்கொள்வதற்காக சுமார் 15 மைல் தூரம் நடந்து வரும் போதுமுன்னே செல்வதுஇவன் தான் ஏனையோரை விட கூடுதலான பாரம்சுமப்பதும்இவன் தான். ஆம்... போராட்டத்தினுள்உள்வாங்கப்படும் போராளிகளுக்கு இவன்புத்தகமாகத் திகழ்ந்தான.

எமது தேசத்தை குடியேற்றம் மூலம் அபகரிக்க முயலும் பேரினவாதிகளுக்கு இவன்கனவிலும் பயமூட்டிக் கொண்டிருந்தான். இவனது தாக்குதல்



மேஜர் அகத்தியர்

கள் அவர்களை தமது சொந்தப்பிரதேசங்களுக்கு ஓடவைத்தன. இந்திய இராணுவத்தினரின் காலத்தில் இவற்றைச் செய்வதென்பது சுலபமாக இருக்கவில்லை. ஒரு முறை நீண்ட தொலைவில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களின்இலக்கு மீது தாக்குதல் தொடுத்துவிட்டுவந்துகொண்டிருந்தனர். இவனும் இவனது வாரிசுகளும் அனைவருக்கும் நல்லபசி. சோர்ந்துவாடினார்கள்போராளிகள்''காம்புக்கு போனா சாப்பிடலாம் கெதியா வாங்க'' என்று அவர்களை ஒருவாறு சமாளித்துக் கூட்டிக்கொண்டு வந்தான். இதேநேரம் சிங்களப் படை கொடுத்த தகவலின் பேரில் இந்தியப்படை இவர்களைத் தொடர்ந்து கொண்டிருந்தது. இவர்கள் அதனைக் காணவில்லை.

அந்தளவுக்குப்பசி இவர்கள் கண்ணை மறைத்திருந்தது. முகாமுக்குச் சென்று அனைவரும் வாயில் உணவை வைத்ததும் தான் தாமதம் இந்தியப் படையின் துப்பாக்கி வேட்டு, எல்லாவற்றையும் மறக்க வைத்தன. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியேறி இந்தியப் படையை எதிர்க்க இன்னொரு பாதையில் காத்திருந்தனர். ஏனெனில், இது எமது நாடு. நாம் ஓட முடியாது. ஓட வேண்டியவர்கள் எல்லை தெரியாது எம் மண்ணைமிதித்தார்களே. ஆனால் இந்தியர்கள் வரவேயில்லை. ஏனோ தெரியாது அப்படியே போய்விட்டனர்.

அக்காலங்கள் மிக வேதனை நிறைந்தவை. பல இடங்களில் பாகாப்புக்காக இந்தி மொழி பேசியே பாதையைக் கடக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தின. இந்தியை விரட்ட பல கட்டங்களில் இந்தி மாதிரி மொழியில் பேசினான் அகத்தியர்.

பின்னர் மட்டக்களப்புப் பிராந்தியத்தைவிட்டுவன்னிக் காடுகளுக்கு நெருக்கமானான் இவன். அங்கும் பல தாக்குதல்களில் கலந்து கொண்டான். இறுதியில் முசல் குத்தியில் தேசவிரோதிகளின் மீதான தாக்குதலில் கப்டன் முரளி 2-வது லெப். அலெக்ஸ் ஆகியோருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டான். இத்தாக்குதலில் பல தேசத் துரோகிகள் உயிரிழந்தனர். வியட்னாமிலும், சிங்கராஜா காடுகளிலும் புரட்சிவாதிகள் மேற்கொண்ட தற்பாதுகாப்பு முறைகளை தமிழீழத்தில் உருவாக்கிய இவன் என்றும் மறக்கப்பட முடியாதவன். அதைவிட ஒவ்வொரு வருடம் பிறக்கும்போதும் தமிழீழ மக்கள் இவனை நினைவு கூரத் தவற மாட்டார்கள். ஏனெனில், இவன் வீரச்சாவெய்தியதினம் ஜனவரி 1.

# பன்னிரண்டு வயதில் ஓர் இசையமைப்பாளர்

ஐந்து வயதில் ஒரு தெலுங்குப் படத்தின் இசையில் லயித்துப் போன சிறிலேகா, அப்பாடல்களைப் பாடிய எஸ். பி. பாலசுப்பிரமணியத்தை நேரில் பார்க்க வேண்டுமென்று அடம்பிடித்தாள். அவர் இருப்பது சென்னையில் என்று பெற்றோர் சொல்லவே மறுநாள் ஏதோ ஒரு வண்டியில் தொற்றிக் கொண்டாவது சென்னைக்குப் போய்விடுவது என்று புறப்பட்டுவிட்டாள். இசையில் அந்தக் குழந்தையின் தீவிரத்தைப் பார்த்த குடும்பத்தார் இசைபயில அவரை சென்னைக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். இன்று அவளுடைய இசையமைப்பில் பாலசுப்பிரமணியமே பாடுகிறார். அந்தச் சிறுமியிடமிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கின்றது என்கிறார் பிரபல பாடலாசிரியர் பாலசுப்பிரமணியம்.

இந்தியாவிலேயே மிகமிக இளம் வயது சினிமா இசையமைப்பாளர் என்ற பெருமையைத் தட்டிச் செல்லும் நிலைக்கு வந்துவிட்ட ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி மணிமேகலை சிறி மேகலாவுக்கு வயது தற்போது பன்னிரண்டு வருடங்கள் மட்டுமே.

பிறவியிலேயே அமைந்த அசாதாரணத் திறமைகளால் நம்மை அசர வைக்கின்ற அலாதியான சக்தி சில குழந்தைகளிடம் காணப்படுகின்றன. இத்தகையவர்கள் சுடர்விடும் அறிவாற்றல், ஊற்றெடுக்கும் கலையுள்ளம், உடல் திறன் தேர்ச்சி என்று ஏதாவது ஒரு வகையில் தங்கள் வயதுக் குழந்தைகளை விட எவ்வளவோ முன்னேறியிருக்கிறார்கள்.

திறமை, படைப்பாற்றல் என்ற இரண்டு மர்மங்களையும் அவிழ்க்க முயற்சிக்கும் சமூக விஞ்ஞானிகளுக்கு எப்போதும் இத்தகையவர்கள் புதிராகவே இருக்கின்றார்கள் ''இளம் மேதைகளின் மரபு அணுக்களிலேயே அவர்களுடைய விசேஷ ஆற்றல் இரண்டறக் கலந்துள்ளது. ஆனால் வாழும் சூழலுக்கு ஏற்ப ஆற்றல் பெருகி வளர்கிறது'' என்கிறார் பெங்களூர் மருத்துவக் கழக மனோவியல் துறையின் கூடுதல் பேராசிரியர் மோகன் ஐசக்.

எனினும் பரம்பரை குணாதிசயமும், பெற்றோரின் வழிகாட்டலும் பெருமளவு உதவினாலும் திறமை வாய்ந்த பல குழந்தைகளைப் பொறுத்தவரை இந்த முடிவு பொருந்துவதாகவும் இல்லை.

ஐந்து வயதிலேயே இராமாயணத்தை ஒப்புவிக்கும்சிறுமி, எட்டு வயதிலேயே கராத்தே கலையின் கறுப்பு பட்டியை பெற்றுவிட்ட சிறுவன் பன்னிரண்டு வயதிலேயே இந்தியாவில் பிரபல இசையமைப்பாளராகி விட்ட சிறுமி, ஏழு வயதிலேயே புகைப்படக் கலையில் நிபுணத்துவம் பெற்று விட்ட சிறுமி. பன்னிரண்டு வயதிலேயே புல்லாங்குழல் மேதையாகி விட்ட சிறுவன், பத்து வயதியேயே கோல்வ் விளையாட்டுக்களில் நிபுணத்துவம் பெற்ற சிறுவன் ஐந்து வயதிலேயே சினிமா நட்சத்திரமாகி விட்ட சிறுமி, பன்னிரண்டு வயதில் கட்டிடக்கலை நிபுணராகி விட்ட சிறுமிஎன்றவாறாக சுமார் நாற்பது ஆற்றல் மிக்கஇளம்மேதைகளைப் பற்றியும், அவர்களது மேதைமையைப் பற்றியும் இந்தியாடுடே அட்டைப்படக்கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளது.

## கேளா ஒலி

பொருள்கள் அதிர்வதால் ஒலி உண்டாகிறது. ஒலியின் அதிர்வெண் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருக்கும் போதுதான் அதை நாம் கேட்கமுடியும். அதிர்வெண் விநாடிக்கு சுமார் 30,000 எனும் அளவைக்கடந்து விடுமானால் அத்தகைய ஒலியை நாம் கேட்கமுடியாது.

ஆனால் இந்த ஒலி ஒன்றுடன் ஒன்று கலக்காத இரு திரவங்களைக் கலக்கவல்லது. இது நீரையும் எண்ணையையும் ஒரு நிலையான கலவைத்திரவமாக மாற்றுகிறது.

இதன் உதவியால் உருக்குத்தண்டுகளின் உள்ளே இருக்கும் துவாரங்களையும் வெடிப்புகளையும் கண்டுபிடிக்கலாம். வைரத்தைப் போன்ற கடினத்தன்மையான உலோகங்களையும் இதன் உதவியுடன் பொடியாக்கலாம். கண்ணாடிகளில் பல்வேறு வடிவங்களில் நுழையிடவும் கேளா ஒலிகளைப் பயன்படுத்தலாம்.

## யுத்தத்தின் போதும் பேணப்பட்ட ஜேர்மனிய நூல் நிலையம்

ஐரோப்பாவிலுள்ள சிறந்த விஞ்ஞான நூல்நிலையங்களில் பெர்லினில் உள்ள ஜேர்மன் அரசு நூல் நிலையமும் ஒன்று. முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் இந்த நூல் நிலையத்தில் இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் உண்டு. இங்குள்ள புத்தக அலுமாரிகள் நீளங்களை கூட்டினால் 10 கிலோ மீட்டருக்கு மேல் வரும்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது இந்தநூல் நிலையத்தின் புத்தகங்களையும் சுவடிகளையும் ஜேர்மனி முழுவதும் 30 இடங்களில் மறைத்து வைத்திருந்தார்கள். அப்படியிருந்தும் 36 இலட்சம் புத்தகங்களில் 18 இலட்சம் புத்தகங்கள் மட்டுமே யுத்தத்தின் பின் கிடைத்தன.

# இவர்கள் புலிகள்

மணலும், சங்கும், சிப்பிகளும் நிறைந்த ஒரு சுடுகின்ற வாசத்தை வெளிக்காட்டும் மணற்பரப்பு.

வானத்திலிருந்து தொங்குவது போல் முகில்கள் ஆடிக்கொண்டிருந்தன. ஒரு சுடலையைப் போல் அமைதி படர்ந்திருந்தது. நேரம் மட்டும்தான் அந்த இடத்தில் விடிவைக் காட்டிக் கொண்டிருந்தது. சூரியன் இன்னும் தன்னை வெளிக்காட்ட மறந்து விட்டான்.

மேகலன் தனது சென்றிக் கடமையில் கவனமாக இருந்தான். தன்னை நம்பி உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நண்பர்களுக்காக அவனது கவனம் எதிரியின் பொயின்டை நோக்கி ஆழ்ந்திருந்தது. தங்களது சென்றி பொயின்டிற்குள், அந்த நேரத்தில் தனக்கு அருகாமையில் யாரோ வந்து நிற்பது அவனுக்குத் தெரிந்தது?

யாரடா?

டேய் அது நான்... கவிதன்.

ஏனடா நித்திரை வரயில்லேயோ?

இல்லை மச்சான், நித்திரையை விட நிம்மதிதானே முக்கியம்.

அப்ப சுதந்திரம் கிடைக்கும் மட்டும் இப்படித்தானோ?

ஓமடா என்றவாறு தனது துப்பாக்கியையும் மண் மூடைகளுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ள துவாரத்திற்குள்ளால் செலுத்துகிறான்.

மச்சான் மேகலன் இரவு சாப்பாடு இரவு இரண்டு மணிக்கல்லோ வந்தது. அந்த நேரம் சாப்பிட்டது. சமிக்கல்லையடா.

நல்ல காலம் மச்சான். நான் சாப்பிடவே இல்லை.

இருவரின் கவனமும் எதிரிலுள்ள எதிரியின் முகாமை நன்கு நோக்கமிடுகின்றன. எந்த அசைவுகளும் அங்கு இல்லை.

மச்சான் மேகலன் கவிதன்தான் இனிமையாக அழைத்தான்.

என்னடா?

இன்றைக்கு இரவைக்கு இருட்டு வரயிக்க எங்கட பொயின்டுகளை ஐம்பது யார் தூரம் இன்னும் முன்னுக்குக் கொண்டு போய் அடிக்க வேணும் எண்டு ராஜன் அண்ணா சொன்னவர்.

உது என்ன? சின்ன விசயம் மச்சான். பின்னுக்கு மண் மூடைகள் இருக்குத்தானே இரவைக்கு முடிச்சுவிடுவோம்.

மச்சான் மேகலன்!

என்னடா?

கொஞ்ச தூரம் மூவ்பண்ணி பார்க்கட்டோ?

வேண்டாம் மச்சான்! அது அவன்களுக்கு ஆள்க்காட்டுறதா போயிடும்.

அதுவும் சரிதான்.

இருவரின் குரல்களும் மௌனமாகி சில திட்டங்களை மனதுக்குள் போட்டுக் கொள்கின்றனர்.

நேரம் விரையத் தொடங்குகிறது. இப்போது எல்லோரும் எழுந்து விட்டனர். அந்த பொயின்டில் ஏழுபேர். ராஜன் அண்ணாதான் பொறுப்பு எல்லோருக்கும் ராஜன் அண்ணா என்றால் உயிர், ராஜனிடம் பாசத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் எல்லையே இல்லை.

அன்றைய பகலும் வழமையான வேலைகளுடனேயே கழிகின்றது. இரவு நேரம் பத்து மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இருளும் வெளிச்சத்தை வென்று விட்டது.

ராஜன் அண்ணா எல்லோரையும் உஷார் படுத்துகின்றார். கவிதனுடன் மேகலனையும் முன்னுக்கு மூவ் பண்ணி போய் பின்னுக்கு மண்மூடைகளுடன் வருபவர்களுக்கு கவர் கொடுக்கச் சொல்கிறார். மேகலனும், கவிதனும் தங்களுக்கேயுரிய பாணியில்எழுபத்தைஞ்சு யாருக்குக்கிட்ட மூவ் பண்ணி விட்டார்கள். அவர்களது ஏ. கே. துப்பாக்கிகள் எந்த நேரமும் அனலைக்கக்க தயாரான நிலையில்தான் அவர்களுடன் ஒட்டி இருக்கிறது.

மற்றைய தோழர்கள் விரைவாக மண்மூடைகளை அரவம் கேட்காமல் அடுக்குகிறார்கள். மண்மூடைகள் ஒழுங்காக அடுக்கப்படுகின்றன. இனி அதிலிருந்து பின் பொயின்டுக்கு மூவிங் பங்கர் அடிக்கவேணும் விடியறதிற்கிடையில இவ்வளவு வேலைகளும் முடிய வேணும்.

ராஜன் அண்ணாவின் பாசக் குரல் கட்டளையை எழுப்புவதுடன் பொறுப்பாளன் என்ற முறையில் மற்றவர்களை விட அதிகமாக கடினமான வேலைகளையும் செய்கிறார்.

இன்றைய காலை விடிவதற்கான அறிகுறிகள் ஓரளவு தெளிவாக தெரியத் தொடங்குகிறது. எதிரிக்கு இப்போதுதான் எங்கள் புதுப்பொயின்ட் தெரிந்திருக்க வேண்டும். அவனது சுழல் துப்பாக்கி காற்றைக் கிழித்து இயங்கத் தொடங்கி விட்டது. ராஜன் அண்ணா எல்லோரையும் கவர் எடுக்கச் சொல்லி கட்டளையிடுகிறார். நாங்கள் எல்லோரும் எங்களது புதுப்பொயின்டிற்குள் கவர் எடுத்துக்கொள்கிறோம்.

எங்களது பழைய பொயின்டிற்குள் எங்களுடைய இன்னுமொரு குழுவினர் வந்து விட்டனர்.

இப்போது எதிரியின் முகாம் எமது சுற்றி வளைப்பால் நெருக்கப்பட்டு விட்டது.

ராஜன் அண்ணாவின் பாசக் குரல் மீண்டும் எங்களை நோக்கி ஒலிக்கின்றது.

எல்லோரும் நல்ல கவர் எடுத்துக் கொள்ளுங்கள் இன்றைக்கு கட்டாயம் பொம்பர் வந்து அடிப்பான்.

எதிரியின் துப்பாக்கியும், ஷெல்லும் இடைவிடாது ஒலிக்கத் தொடங்கி விட்டன. அவன் கிலிகொண்டு விட்டான் என்பது நன்கு புலனாகி விட்டது.

ராஜன் அண்ணாவின் கையில் ஜி பி. எம் துப்பாக்கி துலங்கிக் கொண்டிருந்தது.

ராஜன்அண்ணா முன்னுக்கு வர முற்பட்ட இரு இராணுவ வீரரை அழகாக தனக்கேயுரிய பாணியில் சினைப் பண்ணுகிறார்.

அவர்களது ஈனக்குரல் ''மகே அம்மே'' எனக்கேட்கிறது. அதில்ஒருவன் தள்ளாடித் தள்ளாடி எங்களுக்கு சுமார் இருபத்தைந்து யார் தூரத்தில் வந்து விழுகிறான். அவனது துப்பாக்கி எங்கள் எல்லோரது கண்களுக்கும் தெரிகிறது.

''டேய் கவிதன், நீ கவர் ரவுன்ட்ஸ் அடி, நான் போய் அந்த துவக்கை எடுத்து வாறன்'' என்று ராஜன் அண்ணா சொல்கிறார்.

ஆனால் எங்களில் எவரும் ராஜன் அண்ணா முன்னுக்குப் போவதை அனுமதிக்கத்தயாராக இல்லை. இறுதியில் கவிதன் போய் எடுப்பதாக முடிவெடுக்கப்படுகிறது.

ராஜன் அண்ணா கவர் ரவுன்ட்ஸ் அடிக்கிறார். கவிதன் மிக வேகமாக குரோலில் செல்ல . தலைப்படுகிறான். இப்போது எதிரி விழுந்திருக்கும் இடத்தை அண்மித்து துப்பாக்கியை எடுத்து விட்டான். அப்போது தான் எதிரியொருவனின் துப்பாக்கி கவிதனை நோக்கி முழங்குகின்றது. கவிதனது துப்பாக்கியும் அவர்களை பதம் பார்க்கிறது. மூன்று இராணுவத்தினர்சற்று தூரத்தில் விழுகின்றனர். கவிதனும் காயமடைந்து விட்டது புலனாகிறது.

கவிதனிடமிருந்து ராஜன் அண்ணா! என்ற குரல் முள்ளாக எங்களைக் குத்துகிறது.

ராஜன் அண்ணா பொயின்டிலிருந்து வெளிக்கிட்டு கவிதனை நோக்கி ஓடுகிறார்.

இப்போது எங்களில் எல்லோருமே பொயின்டிலிருந்து வெளியில் வந்து விட்டனர். எதிரியின் வெளிப்பொயின்ரை நோக்கி எங்கள் எல்லோரது துப்பாக்கிகளும் வேட்டுக்களை கக்குகின்றன.

எங்களில் நால்வர் அவனது அந்த பொயின்டுக்குள் புகுந்து விட்டோம். இப்போது அவனது ஒரு வெளிப் பொயின்ட் எங்களது கைக்குள் வீழ்ந்து விட்டது.

ராஜன் அண்ணாவும், கவிதனும் கரியமடைந்து இருந்தனர். அதில் ராஜன்அண்ணாவுக்குப் பெரிய காயம். இருந்தும் ராஜன் அண்ணா தனது வோக்கியால் எங்களது இன்னுமொரு குழுவை உதவிக்கு அழைக்கிறார்.

எமது சககுழுவினர் எமக்கு பாதுகாப்பாக துப்பாக்கியை இயக்கத் தொடங்குகின்றனர். எதிரியிடம் கைப்பற்றப்பட்ட பொயின்ட் சக்கை வைத்து அழிக்கப்படுகின்றது. அவர்களது ஆயுதங்களையும் தூக்கிக் கொண்டு காயமடைந்த இருவரையும் அந்த சூழலில் இருந்து அப்புறப்படுத்துவதற்காக எமது புதுப் பொயின்டை சககுழுவிடம் ஒப்படைத்து விட்டு நாங்கள் விரைகிறோம்.

எங்களது வெற்றியை விட ராஜன் அண்ணாவினதும் கவிதனதும் உடல்நிலைதான் எங்களுக்கு பெரிதாக தெரிகின்றது.

இப்போது நாம் முகாம் பகுதியை கடந்து விட்டோம். ராஜன் அண்ணா ஏதோ கதைக்கிறார் என்னவென்று மேகலன் உற்றுக் கேட்கிறான்.

தண்ணீர் தண்ணீர் என்கிறார். எங்களில் ஒருவன் உறுதியாக சொல்கிறான் மச்சான் மேகலன் வயிற்றுக் காயமடா தண்ணீர் கொடுக்கக்கூடாது. மேகலனுக்கு ராஜன் அண்ணாவை பார்க்க பரிதாபமாக இருந்தது. தங்களுக்கேதாவது என்றால் துடித்துப் போகின்ற ராஜன் அண்ணாவுக்கு தண்ணீர் கூட குடுக்க முடியாதிருக்கின்றதேயென்று.

இருவரையும் கொண்டு பிக்கப் வைத்தியசாலையை நோக்கி விரைகின்றது. இடையில் ராஜன் அண்ணா 'வீரமரணம்' அடைகின்றார். எல்லோரும் ஐயோ! அண்ணா என்று அலறுகின்றனர்.

கவிதன்கஷ்டப்பட்டுஎழுந்து ராஜன் அண்ணாவை முத்தமிடுகிறான். மீண்டும் படுத்துக் கொள்கிறான்.

கவிதன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறான். ராஜன் அண்ணாவின் ஈமக்கிரியைகள் நடைபெறுகின்றன. தங்களது பொறுப்பாளனை அவர்களேஏந்திச்சென்று மாவீரர்மயானத்தில் வைக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றனர்

ஈமக்கிரியைகள் யாவையும் முடித்து விட்டு மேகலன் கவிதனைசந்திக்கச்செல்கின்றான்.

**கா. சுஜந்தன்**

கவிதன் சத்திர சிகிச்சை அளித்ததன் மூலம் காப்பாற்றப்படுகின்றான்.

கவிதன்...

என்னடா மேகலன்.

ராஜன்அண்ணாவின்ட ஈமக்கிரியைகள் எல்லாம் நல்லபடியாக நடந்தது.

கவிதன்...பெருமூச்சொன்றை வீசுகிறான். சிலநேர மௌனத்தின்பின் கவிதனேபேசுகிறான்.

மேகலன்

என்னடா

ராஜன் அண்ணாவின்ட படம் ஒன்று என்ர பாக்கிக்க இருக்கு. அதை எடுத்து பெருப்பிச்சு ராஜன் அண்ணாவீட்ட வீட்டை கொடுடா. ராஜன் அண்ணா ஒரு முறை கதைக் கேக்க சொன்னவர் தன்ரை ஞாபகமாக வீட்டில ஒருபடம் கூட இல்லையென்று.

மேகன் தலையாட்டிக் கொள்கிறான்.

கவிதன் மேகலனிடம் களத்தில் தற்போதைய எங்களது முன்னேற்றம் பற்றி பல கேள்விகளை கேட்டுத்துளைக்கிறான்.

சில நாட்களுக்குப்பின் மேகலன் மீண்டும் தனது பணிக்குத் திரும்புகிறான் இப்போது தங்களது தளபதியால் மேகலன் ஏழுபேர் கொண்ட குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுகிறான். பழையவர்களுடன் புதுமுகங்கள் இருவரும் மேகலனிடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

இப்போதும் எதிரியின் அதே முகாமின் இன்னுமொரு கரையிலுள்ள பொயின்ட் இவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. புதிதாக வந்த தோழர்களைப் பற்றி மேகலன் ஆசையோடு விசாரித்துச் சில புத்திமதிகளைச் சொல்கிறான். அதில் ஒருவன் மிகவும் துடுதுடுப்பானவன். அவனது பெயரை மேகலன் வினாவுகிறான்.

அவன் அதற்கு ராஜன் எனப் பணிவாகப் பதிலளிக்கிறான்.

மேகலன் அவனை அப்படியே கட்டிப் பிடித்துக்கொள்கிறான். ராஜன் அண்ணாவின் கதையை அவனுக்குத் தெளிவாகச் சொல்கிறான். சிறியவனான ராஜன் சில நேர மௌனத்தின்பின் மேகலனிடம் உறுதியாகச் சொல்கிறான்.

நானும் ஒரு மாவீரன், ராஜன் அண்ணா போல மாற முயலுவேன்.

மேகலனின் கண்கள் பனிக்கின்றன. மீண்டும் எதிரியின் முகாமைச் சிலர் அவதானிக்க மற்றவர்கள் தங்களது துப்பாக்கிகளைத் துப்புரவு செய்கின்றனர்.

இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற பாடல் மென்மையாக வானொலியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது

(முற்றும்)

**ஈழநாதம் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட சிறு கதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.**

## என் பிரியமான சகோதரனுக்கு!

இப்போதெல்லாம் - உன்
ஞாபகங்கள் என்னைச்சுற்றி - அடிக்கடி
வலம் வருகின்றன
ஏன்தெரியுமா? இப்போ
நாங்களும் அகதிகளாம்
அந்நிய மண்ணிலே - நெஞ்சை
அழுத்தும் சுமைகளோடு
அகதியாய் அங்கு நீ!
சொந்த மண்ணிலே
சுதந்திரக்காற்றை
சுவாசிக்க விரும்பியதால்
நாங்கள் இங்கு அகதிகளாம்
''83''இலே மிச்சம் வைத்தவர்கள்
குடும்பத்தோடு கொழும்பு மாநகரில்;
சகோதரனே!
ஓடிஓடியே - எங்கள்
கால்கள் உரம் பெற்றுவிட்டன
உள்ளமும் தான்
உனக்கும் ஓர் வேண்டுகோள்!
அந்நியமண்ணிலே
அந்நியமாகிப் போய் விடாமல்
அகதி என்னும் அந்தஸ்தும்
அலைந்து திரியும்
அவலம் நிறைந்த வாழ்க்கையும்
எம்முடன் தொலைந்து போகட்டும்!
எமக்கடுத்த சந்ததிகள்
சுதந்திரக் காற்றை
சுத்தமாகச் சுவாசிக்க - இன்று
எம் தோள்களில்
துப்பாக்கி தூக்குவோம்
விரைந்து வா!

- திருமகட்செல்வி

'ஈழநாதம்' இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கவிதை.

# தற்பாதுகாப்பிற்கு அணு ஆயுதங்கள்; 3ஆம் உலகில் உற்பத்திப்போட்டி

அமெரிக்க ஜனாதிபதியாக றீகன் இருந்த போது விண்வெளிப் போர்த் திட்டத்தை அறிவித்தார். அந்தச் சமயத்தில் உலகில் அணு ஆயுத அச்சுறுத்தல் மிகக் கடுமையாக இருந்தது. புதிய சமாதானச் சூழலை உருவாக்கியவர் கொர்பசேவ் அமெரிக்க-சோவியத் கெடுபிடிப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து உலகில் சமாதானம் பற்றிய நம்பிக்கை வலுவாக வேரூன்றியது.

இன்றைய தினம் சோவியத் யூனியன் இல்லை. ஆனால், அணு ஆயுத வல்லரசாக சோவியத் யூனியன் என்ற ஒரு நாடு இருந்த நிலை மாறிய ரஷ்யா, உக்ரென், பைலோ ரஷ்யா, கசகிஸ்தான் என நான்கு அணு ஆயுத நாடுகள் இப்போது தோன்றி விட்டன.

உலகில் ஒரேயொரு வலுவான அரசியல் சக்தியாக உருவாகி வரும் அமெரிக்காவின் ஆதிக்க அபாயத்தைச் சமாளிக்க வளர்ந்து வரும் நாடுகள் பல ஓசையின்றி அணு ஆயுத உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அமெரிக்க முந்தைய சோவியத் யூனியன். பிரிட்டன். பிரான்ஸ், சீனா ஆகியவை அணு ஆயுத பலம் கொண்டுள்ள நாடுகள் என பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இஸ்ரேல், இந்தியா, பாகிஸ்தான் ஆகியநாடுகளிடம் அணு ஆயுதங்கள் தயாரிக்கும் ஆற்றல் இருப்பது வெளிப்படையான விஷயமாகும்.

இந்த நிலையில் அணுஆயுத உற்பத்தியில்ஈடுபட்டு, உலகை மேலும் ஆபத்துக்குள்ளாக்கும் வேலையில் இரகசியமாக இறங்கியுள்ள நாடுகளைப்பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## வட கொரியா

முப்பது மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணு உலையை இந்த நாடு பூர்த்தி செய்து விட்டதை 1987 ஆம் ஆண்டின் செயற்கை கோள் படங்கள் எடுத்துக்காட்டியுள்ளன அணு உலை வெறும் மின்சார உற்பத்திக்குத் தான் என்றால், அதன் அருகில் மின் உற்பத்தி சாதனங்களும் மின்சாரம் எடுத்துச்செல்லப்படும் கம்பி வழிப்பாதைகளும் இருக்க வேண்டுமல்லவா? செயற்கைக்கோள் படங்களில் அவை காணப்படவில்லை. எனவே இந்த அணு உலை அணு ஆயுதத்தயாரிப்புக்கான புளுட்டோனியம் போன்றவற்றை உற்பத்தி செய்ய நிர்மாணிக்கப் பட்டுள்ளது என ஊகிக்க இடமுண்டு.

மற்றொரு அணு உலை (50—200 மெகவாட் திறன்) கட்டும் பணி நடைபெற்று வருவதையும் படங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. வடகொரியா இப்போது அணு ஆயுதங்கள் கொண்டு செலலும் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டு சிரியாவிற்கு விற்பனை செய்துள்ளதாக நம்பப்படுகிறது.

எனினும், தென் கொரியாவின் அச்சுறுத்தல் இனி இல்லை என்ற நிலையில், வடகொரியா தனது அணு ஆயுத உற்பத்தித் திட்டங்களை எதிர்காலத்தில் கைவிட்டு விடவும் வாய்ப்பு இருக்கிறது.

## ஈரான்

''இசுரேலிடம் அணு ஆயுதங்கள் இருக்கும் வரை முஸ்லிம்களாகிய நாம் அணுகுண்டு தயாரிப்பதில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும். அணு ஆயுதப் பரவல் தடை குறித்த ஐ. நா. முயற்சிகளைப் பற்றிக் கவலைப் படக் கூடாது'' என்று ஈரானிய துணை ஜனாதிபதி 1990 அக்டோபர் 25-ல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஈராக்குடன் போரிட்டுத் தோல்வியுற்ற ஈரான், முன்னைய ஷா மன்னர் தொடங்கி வைத்திருந்த அணுகுண்டுத் தயாரிப்புத் திட்டத்தை 1987க்குப் பிறகு முடுக்கி விட்டது. குண்டு தயாரிப்பதற்கான எரிபொருளை உற்பத்தி செய்ய பல்வேறுபட்ட வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது சீனாவிடமிருந்து புளுட்டோனியம் உற்பத்தி செய்யும் அணு உலையை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. ஆயுதம் தயாரிக்கப் பயன்படும் அளவுக்கு யுரேனியத்தைச் செறிவூட்டுவதற்காக மிக நவீன லேசர் தொழில் நுட்பம் உட்பட பல வழிமுறைகளை ஈரான் பரிசோதித்து வருகிறது. சீனா உதவி செய்தால் கூட ஈரான் அணுகுண்டு தயாரிக்கப் பத்து ஆண்டுகள் ஆகிவிடும் என்று அமெரிக்க நிபுணர்கள் கருதுகின்றனர். சீன உதவி நீங்கலாக, அல்ஜீரியாவிலிருந்தும் கதிரியக்க வீச்சுடையபொருட்கள் மிகக் கடும் பாதுகாப்பு வசதிகளோடு ஈரானுக்குக் கொண்டு வரப்படுவதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன

## அல்ஜீரியா

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அல்ஜீரியா, சீனாவுடன் பதினைந்து மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட அணு உலை கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட போது அமெரிக்க நிபுணர்கள் அதைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

அல்ஜீரிய பாலைவனத்தின் நடுவில் விமான எதிர்ப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மர்மமான முறையில் செய்யப்பட்டிருப்பதை இந்தஆண்டு செயற்கைக் கோள்படங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. கூர்ந்து கவனித்தால் அணு உலை இருப்பதையும், அதைச்சுற்றி சீனாவின் பாணியில் காய்கறிச் செடிகள் பயிர்செய்யப்பட்டு இருப்பதையும் காணலாம். இந்தப் பாணியிலிருந்தே அல்ஜீரியாவின் அணு ஆயுதத்திட்டத்தின் பின்னணியில் சீனா இருப்பதுதெரியவருகின்றது.

இந்த அணு உலை 50-60 மெகாவாட் திறன் கொண்டது. குண்டு தயாரிப்புக்கான எரிபொருளை உற்பத்தி செய்யப்பயன்படும் புளுட்டோனியத்தை உற்பத்தி செய்வதே இந்த உலையின் ஒரே பணி என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

1968இல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் அல்ஜீரியா கையெழுத்திட்டது. சர்வதேச அணுசக்திநிறுவனத்தினர் தனது அணு உலையை (15 மெகாவாட்) பார்வையிடவும் அப்போது அனுமதித்தது. பின்னர் அந்த உலை 50-60 மெகாவாட் திறன்கொண்டதாக மாற்றப்பட்டிருக்கலாம் என்று இப்போது கருதப்படுகிறது. அல்ஜீரியா பிற நாடுகள் அணுகுண்டு தயாரிக்கவும் உதவி செய்யும் என்று மேலை நாட்டு நிபுணர்கள் கூறுகின்றனர். ஈராக் விஞ்ஞானிகள்சிலர் அல்ஜீரியாவில் பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் அல்ஜீரியாவிடமிருந்து அணு ஆயுத தொழில் நுட்பத்தைப் பெற ஈராக் முயற்சி செய்வதாகவும் அமெரிக்க உளவுத்துறையினர் கூறுகின்றனர்.

## சீனா

அணு ஆயுதத் தொழில்நுட்பத்தை விற்பனை செய்வதில் முன்னணியில் இருப்பது சீனா. பல சந்தர்ப்பங்களில் சீனா இதை மறுத்து வருகிறது. வடகொரியா இந்தத்தொழில்நுட்பத்தை வாங்கவும், விற்கவும் செய்கிறது. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகச் சர்வதேச அணுசக்தி நிறுவனம் கண்டுபிடித்தாலும் கூட, அதே நாடுகளைத் தண்டிக்க அந்த ஒப்பந்தத்தில் விதிமுறைகள் ஏதும் இல்லை. இந்த விஷயம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்லப்படும். அவ்வளவு தான்.

எந்தெந்த நாடுகள் அணுகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## 3ஆம் உலகில் வேலைதேடும் 4000 சோவியத் விஞ்ஞானிகள்

சோவியத் யூனியன் சிதறிப் போனதால் கைமாறியது அணு ஆயுதங்கள் மட்டும் அல்ல.

அணு விஞ்ஞானிகளுக்கும் கிராக்கியாகி விட்டது.

அமெரிக்காவுக்கு நிகராக அணு ஆயுதத் தயாரிப்பில் முனைந்து ஈடுபட்ட சோவியத் யூனியனின் வெற்றி ரகசியம் - இந்த விஞ்ஞானிகள் தான். இவர்கள் இப்போது என்ன செய்யப் போகின்றார்கள் என்பது பெரிய கேள்விக் குறியாகி விட்டது.

அணுவிஞ்ஞான அறிவுள்ளவர்கள் மட்டும் நாலாயிரம் பேர் இருப்பதாக அமெரிக்க உளவு ஸ்தாபனம் கணக்கிட்டிருக்கிறது. சி. ஐ. ஏ, அலுவலகத்தின் தலைமைப் பீடத்தில் சோவியத் விஞ்ஞானிகள், அடுத்த மூவ் என்ன? என்று கண்காணிப்பதற்காகத் தனிப்பிரிவு இபபோது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த விஞ்ஞானிகளைத் தங்கள் நாடுகளுக்கு வந்துவிடும்படி பிரேசில், வடகொரியா, லிபியா, ஈராக், ஈரான், பாகிஸ்தான், இந்தியா முதலிய நாடுகளைச் சேர்ந்த சில ஸ்தாபனங்கள் ஏற்கனவே அழைப்பு விடுத்திருக்கின்றனவாம்.

எங்கள் விஞ்ஞானிகள் தேசப்பற்று மிக்கவர்கள். அப்படியெல்லாம் வேறு நாட்டுக்குப்போய் அணுகுண்டு தயாரிக்க உதவமாட்டார்கள் என்று முன்னாள் சோவியத்அணுசக்தி அமைச்சர் விக்டர் மிகையிலாவ் கூறியிருக்கிறார், அவரே அடுத்தடியாகஇன்னொன்றையும் சொல்லியிருக்கிறார். ஆனால் மாதம் நாநூறு ரூபிள் (ஒன்பதுடாலர்] சம்பளம் வாங்குகிறவர்கள் பிழைப்புக்கு இனி என்ன செய்வார்கள் அவர்களுக்குத் தெரிந்த ஒரே தொழிலும் அணுகுண்டு செய்வது தானே என்கிறார்.

சோவியத் விஞ்ஞானிகளை அமெரிக்காவுக்கு வரவழைப்பதற்காகக் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் திட்டங்களை அறிவிக்கும்படி அமெரிக்கஅதிபர் புஷ் பல்கலைக்கழகங்களுக்குஉத்தரவிட்டிருக்கிறார். ஏற்கனவே சோவியத் உயர் விருதான லெனின் பரிசு பெற்ற பௌதிக விஞ்ஞானி அலெக்சி அப்திகோசெவ் சிகாகோ போய்விட்டார், விண்வெளி விஞ்ஞானி ரோயால்ட் சக்தெயேவ் மேரிலாந்து பல்கலைக்கழகத்தில் சேர்ந்துவிட்டார். சோவியத் விஞ்ஞானிகளுக்காகத் தனியே நிதி திரட்டவும் ஏர்பாடாகியிருந்தது.

இந்தியாவுக்கு நிறைய சோவியத் அணு விஞ்ஞானிகள்போய்விடக் கூடும் என்று அமெரிக்கா கவலைப்படுகின்றது கடந்த மூன்று வருடங்களில் இந்தியாருக்கு வந்துசென்ற 677 சோவியத் விஞ்ஞானிகளின் தனிப்பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அதில் குறிப்பாக 56 பேரை இடைவிடாது கண்காணிக்கிறது அமெரிக்க உளவுத்துறை.

# 200 நாள் ஆட்சியில் ஜெயலலிதா பெரிதாக எதையும் சாதிக்கவில்லை

## இந்தியப் பத்திரிகை விமர்சனம்

''கடந்த இருநூறு நாட்களில் ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகளின் கூட்டல் - கழித்தலைப் பார்த்தால் அவர் பெரிதாக எதுவும் சாதித்து விடவில்லை என்பது தெரியவரும். இலங்கைத் தமிழரை வெளியேற்றும் விவகாரத்திலும் புலிகள் தொடர்பான விவகாரத்தில் மட்டுமே சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டது. அதற்குக் காரணம் இதில் ராஜீவ் கொலை சம்பந்தப்பட்டிருபதால் மத்திய அரசு கொடுத்த ஆதரவு ஆகும்''. இவ்வாறு இந்தியப் பத்திரிகையொன்று கருத்துத் தெரிவித்துள்ளது.

மற்றபடி நிர்வாக ரீதியாக ஜெயலலிதாவின் ஆட்சியில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. லஞ்சமும், ஊழலும் எப்போதும் போலத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. கள்ளச்சாராயத்தை ஒழிக்கா விட்டால் இன்ஸ்பெக்டர் பதவிக்கு ஆபத்து என்ற பிறகும் இது ஒழியவே இல்லை மின்சாரக்கட்டணம், பஸ்கட்டணம் பால்விலை, ரேஷன் அரிசி என்று ...அரசு வசமுள்ள பொருள்களுக்கே விலை உயர்த்தப்பட்டிருக்கிறது மற்றபொருள்களின்விலைகளைக் கட்டுப்படுத்தும்நிலையிலேயே அரசாங்கம் இல்லை ஜெயலலிதா ஆட்சியின் ஒரே புதுமை-அவரது அமைச்சரவை சகாக்கள் பலரும் இப்போதெல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகளில் வாசகர் கடிதம் பகுதிக்கு கடிதம் எழுதுவது தான் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளது

டடா, என். எஸ் எ. போன்ற ஆபத்தான கறுப்புச் சட்டங்கள் கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கப்படுவதால் பல அத்துமீறல்கள் நடக்கின்றன. 'டடா' கைதியான நாகராசன் (கருணாநிதிக்கெதிராக) பத்திரிகைப் பேட்டி தர அனுமதிக்கப் படுகிறார். மற்ற டடா கைதிகள் குடும்பங்களைப் பார்க்கக்கூட அனுமதிகிடைப்பதுகஷ்டம்



அதிகார வர்க்கத்துக்கு ஜெயலலிதா ஆட்சியில் முழு அதிகாரம் என்று கருதவும் முடியவில்லை. அவரது எம். எல். ஏக்கள் வரிசையாக முறை போட்டுக்கொண்டு ஆங்காங்கே அதிகாரிகளை விரட்டிக் கொண்டும் உதைத்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்றுஇருநூறு நாட்கள் நிறைவு பெற்றதை ஒட்டி இந்தியப் பத்திரிகையொன்று வெளியிட்டிருக்கும் கருத்துக்களில் சில இங்கே தரப்படுகின்றது. ஜெயலலிதா ஆட்சியில் ஒரே புதுமை அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் ஆங்கில பத்திரிகைகளில் வாசகர் கடிதப்பகுதிக்கு கடிதம் எழுதுவது மட்டுமேயாகும்.

## விரிந்து வரும்

ஆனையிறவுப் போரின் போது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தரையிறக்கமே தமிழீழப் போரில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பெரும் தரையிறக்கமாகும். இத் தரையிறக்கத்தின்போது பல ஆயிரம் துருப்பினரும் கவச வண்டிப் பிரிவுகளும் இராணுவத் தளபாடங்களும் இறக்கப்பட்டன. ஆனால் இத் தரையிறக்கத்திற்கான போது கடற்பரப்பு இராணுவத்திற்கு பெரும் சாதகமாக இருந்தது. ஆழமான கடற்பரப்பும் மணற்பாங்கான கரையோரமும் இராணுவ தளபாடங்களை ஏற்றிவந்த கப்பல்களும் இராணுவம் பயன்படுத்திய விசைப்படகுகளும் இலகுவாக சிரமமின்றி கரையை அடைவதற்கு ஏதுவாக இருந்தன, இதே போன்றே கடந்த ஒக்டோபரில் பூநகரிப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் சங்குப்பிட்டி இறங்குதுறையைச் தடைசெய்யவும் இராணுவம் மேற்கொண்ட தரையிறக்கமும் கரையோரப் பிரதேசத்தின் புவியியல் நிலைமைகள் வெகுவாக அவதானிக்கப்பட்டபின்பே மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணக்குடாநாட்டை நோக்கியதாக இருக்கும் கல்முனைப்பகுதியில் முகாம் அமைக்கும் எண்ணம் இராணுவத்திற்குஇருந்தவேளையிலும் கல்முனையில் இருந்து சுமார் இரு மைல்களுக்கு அப்பால் உள்ள கௌதாரிமுனை ஒருகரைப் பகுதியிலேயே இராணுவம்தரையிறங்கியதுஇதற்கு கல்முனைப் பகுதி பாறைகளைக் கொண்ட கரையோரத்தைக் கொண்டதாக இருந்தமையும் கௌதாரிமுனை - ஒரு கரைப் பகுதி கரைஓரம் மணற் பாங்கான ஆழம் கூடிய அதே வேளை வற்றுப் பெருக்கு கடல் மட்ட பாதிப்பால் பிரச்சினை உருவாகாத பகுதி என்பதனாலேயே தரையிறக்கம் இடம் பெற்றது.

### புலிகளும் கடற்போரும்

சிறிலங்கா இராணுவத்தினரின் தரையிறக்கம் பெருமளவில் புவியியல் அமைப்புச் சார்ந்ததாக இருந்தமை போன்றே கடற்புலிகளின்தாக்குதல்களும் கரையோரத்தினதும், கடற்பரப்பினதும் புவியியல் அமைப்புசார்ந்ததாகவே இருந்தன.

கடற்புலிகள், சிறிலங்கா கடற்படைக் கப்பல்கள் மீது ஆரம்பத்தில் கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டன. பின்னர் குறிப்பாக 1991இல் கடற்பகுதியில் கண்ணிவெடித் தாக்குதல்களைம்யுகடற்படைரோந்துப்படகுகளை வழிமறித்து அதிரடித் தாக்குதல்களையும் நடத்தினர்.

இத் தாக்குதல் முதலில் லைடன் தீவிற்கும், நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, ஆகிய தீவுகளுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இடம்பெற்றன. இக்கடற்பரப்பில் கடற்படை ரோந்துப் படகுகள் செல்லக் கூடியதாக இருந்த வேளையிலும், குறிப்பிட்ட சில பகுதிகளின் ஊடாகவே செல்லவேண்டியுள்ளமை புலிகளின் தாக்குதலுக்குவசதியாகஅமைந்தன. இதேவேளை யாழ். குடாக்கடல் நீரேரியில் புலிகள் நடத்திய தாக்குதலின் போதும் புவியியல் தன்மைகள் புலிகளுக்கு வாய்ப்பாகவும், சாதகமாகவும் இருந்தன.

### கடற் பரப்பின் முக்கியத்துவம்

இந் நிலைமைகளை தொகுத்து நோக்குமிடத்து தற்பொழுது நடந்துமுடிந்தபோர்களில் கடற்பரப்பின் புவியியல் முக்கியத்துவம் போரில் தெளிவாகப் பிரதிபலிப்பதைக் காணலாம் அத்தோடு எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளிலும் கடற்பரப்பின் பங்கு முக்கியமானதாக இருக்கும்.

குடாநாட்டின் மீதான படையெடுப்பின்போது புதிய போர்முறைகளை சிறிலங்கா இராணுவம் உருவாக்க வேண்டிய நிலையில் இருப்பதால் அவை பெரும்பாலும் கடற்பிரதேசத்துடன் தொடர்புபட்டதாகவும் பெரும் தரையிறக்கத்துடன் தொடர்புபட்டதாகவுமே இருக்கும். அது பெரும்பாலும் கடற்பிரதேசத்தின் தரை அமைப்பு கடற்பரபின் ஆழம், கரையோரத்தின் தன்மை, பருவக்காற்றுக்களின் தாக்கம். சிலவேளைகளில் கடலின் வற்றுப்பெருக்கு என்பனவும் அவற்றைத்தீர்மானிப்பவையாகஇருக்கும். இந் நிலையில் தற்பொழுதுநாமும் இராணுவ தந்திரோபாயங்களில் கடற்பரப்பின் புவியியலும், கரையோரத்தின் அமைப்பும் கவனத்தில் கொள்ள வேண்டிய தவிர்க்கமுடியாத அம்சங்களாக மாறிவிட்டன

### தற்பாதுகாப்பு

வருகின்றன என்ற ஐயப்பாடு எழுந்துள்ளதோ ,அவற்றின் மீது நிர்ப்பந்தம் செலுத்த அமெரிக்காவும், அதன் கூட்டாளி நாடுகளும் முயற்சிசெய்யுமா என்ற கேள்வி எழுகின்றது. வடகொரியா தனதுஅணு ஆயுதத் திட்டங்களைக் கைவிடாவிட்டால் வர்த்தகஉதவிகள் கிடைக்காதுஎன ஜப்பான் எச்சரித்துள்ளது. தென்கொரியாவில் அமெரிக்க அணு ஆயுதங்கள் ஏதும்இல்லை எனகண்காணிப்புக்குழு கண்டறிந்து நிரூபிக்குமானால் தங்கள் நாட்டிலும் சர்வதேச அணு சக்தி நிறுவனம் பார்வையிட அனுமதிக்கலாம் என்று வடகொரியா கூறியுள்ளது

சீனாவின் மீது நிர்ப்பந்தம் செலுத்த அமெரிக்கவும் பிரிட்டனும் முயற்சி செய்கின்றன. நவம்பர் 91 இல் சீனா சென்ற அமெரிக்க அயல்துறை அமைச்சர் பேக்கர் நடத்திய பேச்சு வார்த்தைக்குப் பிறகு 92 ஏப்ரலுக்குள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட சீனா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அபாயத்தைக் காட்டி மூன்றாம் உலக நாடு அணு ஆயுதத்தயாரிப்பில் ஈடுபடுவது நியாயமல்ல. அதே சமயம் தன்னிடம்உள்ள அணு ஆயுதங்கள் அத்தனையையும் ஒழித்துக்கட்டஅமெரிக்காவையும் வலியுறுத்த வேண்டும்.

இந்த உலகத்தை அணு ஆயுத மரணக்குழியில் தள்ள எந்த ஒரு நாட்டுக்கும் உரிமை இல்லைஎன்பதுதான் நியாயம்

நன்றி: ஜூனியர்போஸ்ட்

## 200நாள்ஆட்சியில்

கருத்துச் சுதந்திரத்துக்கும் அவ்வப்போது அச்சுறுத்தல்கள் நடக்கின்றன. 'நக்கீரன்' வார இதழுக்கும் பத்து நாட்களாகக் காரணம் கூறாமல் மின் சப்ளை துண்டிப்பு, சாதாரண அவதூறு வழக்குப் போடுவதற்குப் பதில் அதிரடி கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் மீது மட்டும் தான் டடா பாயும் என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்ட சமயத்திலேயே புலிகளைக் கடுமையாக விமர்சிக்கும் நக்ஸல் பாசி அமைப்பினரும் கைது செய்யப்பட்டார்கள். புலிகளை எதிர்க்கும் மனித உரிமைக் கழகப் பிரமுகர் பி. வி. பக்தவத்சலம் ஏற்பாடு செய்திருந்த நிருபர்கள் சந்திப்பை அரசாங்கமே ரத்துச் செய்தது. பிரிட்டிஷ் காலத்து ராஜதுரோகக் கூட்டுத்தடைச் சட்டத்துக்கு உயிரூட்டப்பட்டது.

கடந்த கால நிர்வாக பணியிலிருந்து மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. ஆயிரமாயிரம் கார்கள் ஊர்வலமாகப் போவது டாக்டர் பட்டத்துக்குவிழா, விழாவுக்கு போஸ்டர், லட்சக்கணக்கான ரூபாய்க்குப் பத்திரிகைகளில் விளம்பரம், ஒன்றேகால் கோடி பேருக்கு இலவச வேட்டி சேலை வழங்குவதற்கு ஒன்றேகால் கோடி ரூபா செலவாகுமோ என்று பிரமிக்க வைக்கும்விழா ஏற்பாடுகள்... எதுவுமே மாறவில்லை. எல்லாமே நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து நடப்பவைதான். எம். ஜி, ஆர். பாணியிலேயே திடீரென்று அமைச்சரை நீக்குவது எனக்கும் என் மனைவி அண்ணன் பெயரைச் சொல்லுபவர்களுக்கும் தொடர்பில்லை என்று எம். ஜி. ஆர். அறிக்கை வெளியிட்டது போலவே நடராஜன் கட்சியில் இல்லை. அவருடன் யாரும் தொடர்பு கொள்ளக்கூடாது என்று அறிவிப்பது எல்லாமே தொடர்ந்து அதேபோல் நடக்கின்றன.

சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் வாழ்க்கைப் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அன்றாட கஷ்டங்கள் புதிய ஆட்சியில்குறைந்தபாடில்லை. கோவை ஐவுளித் தொழிலாளர் போராட்டத்தில் முதலமைச்சர்தலையிட்டுபோனஸ் தரக் கூறியும் தராத நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கஅரசு முன்வரவில்லை.

ஜெயலலிதாவுக்கு சாதகமாக உள்ள அரசியல் அம்சங்கள் மக்கள் அதிருப்திக்கு வடிவம் தருவதற்கு ஏற்ற வலிமையான எதிர்க்கட்சிகள் இல்லை என்பதும் மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சி ஜெயலலிதாவின் ஆதரவையே நம்பியிருக்கின்றது என்பதும் ஆகும்.

இப்போது ஜெயலலிதா அரசியல் ரீதியாகச் சில முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கி சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்.

முதல்பிரச்சினை சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பாதித்துக் கொண்டிருக்கும் விலைவாசிப் பிரச்சினையாகும். ரேஷன் முறையைச் சீரமைக்கவும், பொதுவாக விலைகளைக் குறைக்கவும் அரசு கடும் நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் மக்கள் நிச்சயமாக எதிர்க் கட்சிகளுக்கு வலுச்சேர்க்கத் தொடங்கிவிடுவார்கள்.

இரண்டாவது பிரச்சினை- தோழமைக் கட்சியான காங்கிரசுடன் உள்ள உறவுபற்றியதாகும். காவிரிப் பிரச்சினையில் எந்த வாழப்பாடி ராமமூர்த்திக்கு அ. தி. மு. க. பாராட்டுவிழா நடத்தியதோ அவரே இன்று கர்நாடகத் தமிழர் பிரச்சினையில் டாக்டர் ராமதாஸைக் கைது செய்து வைத்திருப்பது தவறு என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

டெல்லியில் மாறிவரும் அரசியல் சூழ்நிலையில் அஜித் சிங் போன்றோர் கட்சிமாறி வந்தால் காங்கிரஸிற்கு அ.தி.மு.க. தயவு தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டால் - காங்கிரஸ் கட்சியின் அணுகு முறை சுத்தமாகமாறிவிடும்.

விடுதலைப்புலிகள் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவது என்பது மத்திய அரசின் உதவி இருந்தால்மட்டும்தான்மாநில அரசுக்குச் சாத்தியம். அஸாம் தீவிரவாதிகளான உல்ஃபாவினருடன் மத்திய அரசு ரகசியப் பேச்சுவார்த்தை நடத்துவதாகச் செய்திகள் வெளிவரும் நிலையில் எதிலுமே மத்திய அரசின் அடுத்த ஸ்டெப் என்னவாக இருக்கும் என்று ஊகிப்பது சிரமம்தான்.

கர்நாடகத் தமிழர் பிரச்சினை ஜெயலலிதா அரசுமுன்புள்ள மற்றொரு பெரிய சோதனையாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை ஒரு பாதுகாப்பு வலையத்துக்குள்ளேயே வைத்துக் கொள்ளும் நிலைக்குப் போய்விட்ட ஜெயலலிதாவுக்கு மக்களுடனான நேரடித் தொடர்புகள் குறைந்து ஒரு சில ஆலோசகர்கள் தரும் தகவல்களையே நம்பிச் செயல்பட வேண்டிய சிக்கல் அதிகரித்தால் அதைவிடப் பேராபத்து வேறெதுவுமில்லை.

## பிரிட்டன் பொதுதேர்தல் ஏப்.9 இல்நடை பெறும்

பிரிட்டனில் வருகின்ற ஏப்ரல் 9ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக பினான்ஸியல் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மார்ச் நடுப்பகுதியிலிருந்து ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கன்சர்வேட்டிவ் அரசாங்கம் விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திருப்பதை இதற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிட்டிஷ் ஒரோஸ்பெஸ் 146 ஜெட்விமானம் பிரதமர் ஜோன் மேஜரையும், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள், படப்பிடிப்பாளர்கள் போன்றோரைஏற்றிச்செல்லும்

## இந்.சீன எல்லை பிரச்சினை டில்லியில் பேச்சு வார்த்தை

(டில்லி)

இந்திய - சீனா எல்லைப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் நேற்று நடைபெற்றன. இன்றும்இந்தபேச்சுவார்த்தைகள் நடைபெறும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் இரண்டு நாடுகளினதும் வெளியுறவு அதிகாரிகள் குழுவினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய, சீன பிரதமர்கள் பெல்ஜிங், புதுடில்லி, நியூயோர்க் ஆகியஇடங்களில்முன்னர் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக இந்த பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைக்குரிய பகுதிகளில் அமைதி நிலவுவதையே இரு தரப்பினரும் விரும்புவதாக இந்திய வெளிவிவகார அதிகாரிஒருவர்தெரிவித்தார்.


இதோ நிதர்சனமாகி விட்டன

இம்மண்ணுக்கே உரித்தான

மகோன்னத தயாரிப்புக்கள்

பல்சுவை பானங்கள்
(MULTI TASTE DRINKS)

★ பழ ரச பானம் - *FRUITS BARLEY*
★ கிறீம் சோடா - *CREAM SODA*
★ இஞ்சி சோடா - *GINGER BEER*
★ மென் சோடா - *PLAIN SODA*
★ பனம் பதநீர் - *P/SWEET TODDY*

REFRESHER

புத்தூக்கி

*A CO-OP-PRODUCT* ஓர் கூட்டுறவு தயாரிப்பு

விநியோகம் செய்ய விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்

பொதுமுகாமையாளர்
யாழ். பகுதி தெங்கு பனம் பொருள்
கூ. சங்கங்களின் கொத்தணி
330 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (2226)



இதோ!

மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்
பிரசித்திபெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

■ அழகு மிளிரும் வர்ணவேலைகளா
■ ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய
நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்
New Era Publications
267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(இ-3)

## தமிழீழ விடுதலைப்போர்

# விரிந்து வரும் போர் முனைகளில் கடற் பூகோளத்தின் முக்கியத்துவம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கடற்பரப்பின் முக்கியத்துவம் இன்று என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றது. கடற்பரப்பில் நிகழும் தாக்குதல் நடவடிக்கைகளும், பெரும் இராணுவத் தரையிறக்கங்களும் இதற்குக் காரணமாகின்றன. இதன் காரணமாக கடற்பரப்பினதும், கரையோரப் பகுதியினதும் பூகோளஅமைப்புக்களும் அவற்றின் தன்மைகளும், பருவக்காற்று போன்று வளிமண்டல நிலைமைகளும் இன்று வடக்குப் போரின் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகியுள்ளன.

### யுத்தத்தில் கடற்பரப்பின் முக்கியத்துவம்

1990 யூனில் போர் ஆரம்பித்ததில் இருந்து, இதுவரை வடமாகாணத்தின் பெரும் பாகம் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதில் காணப்படும் இராணுவ முகாம்களில் அனேகமானவை கரை ஓரத்தை அண்டியவையாக அல்லது கரையோரத்தில் இருந்து விரைவில் விநியோகத்தை மேற்கொள்ளக் கூடிய நிலையிலேயே உள்ளன. அவ்வாறு இல்லாத முகாம்களைக் கடந்த ஒன்றரை வருடப் போரில் சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. இந்த வரிசையில மாங்குளம், கிளிநொச்சி, கொக்காவில் என்பன அடங்கியிருந்தன.

இதேவேளை கரையோர வழி விநியோகத்தை மேற்கொள்ளக் கூடிய பகுதியில் இருந்த முகாம்களை பெரும் இழப்பின் பின்பாயினும் இராணுவத்தால் தக்கவைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்துள்ளது இந்த வரிசையில் முல்லைத்தீவு, சிலாவத்துறை ஆனையிறவு முகாம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

ஆனால், யாழ். கோட்டை இராணுவ முகாம் கடற்கரை ஓரப்பகுதியில் இருந்தும், சிறிலங்கா இராணுவத்தால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. பெருமுயற்சி செய்தும், பெரும் இழப்புக்களைச் சந்தித்தும் சிறிலங்கா இராணுவம் தோல்வியே கண்டது. இதற்கு புலிகளின் துணிச்சல் மிக்க போராட்டமும் சிறந்த பங்கர் அமைப்புகளும் காரணமாக இருப்பினும், கடல் வழி விநியோகத்திற்கான கடல் பரப்பு சாதகமான தன்மையைக் கொண்டிருக்காமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

இந்நிலையில் தரைப்போரில் பிரதேச தரைத்தோற்றம், வடிகால் அமைப்பு, போன்ற இயற்கை அம்சங்களும் கட்டடங்கள், வீதிகள், பாலங்கள் போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்களும் முக்கியத்துவம் பெறுவது போன்று கடற்பரப்பில் கடலின் ஆழம், வற்றுப் பெருக்குகள் கடற்கரை ஓர தரையமைப்பு, பருவக்காற்றுக்கள் என்பனவும் குறிப்பிடக்கூடிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

### வடமாகாணத்தின் கடற்பிரதேச பௌதிகஅமைப்பு

வடமாகாணத்தின் தரைப் பகுதி பெரும்பாலும் சமதரையாகும். அதேவேளை, கடற்பரப்புசிலபகுதிகள்ஆழம்கூடியவையாகவும் சிலபகுதிகள்ஆழம் குறைந்தவையாகவும், சில பகுதி மணற்பாங்கான கடலடிப் பகுதியையும் கரையோரத்தையும் கொண்டவையாகவும், சிலபகுதி பாறைகளைக் கொண்ட கடலடிப்பகுதியையும், கரைஓரத்தையும் கொண்டவையாகவும், சில பகுதிகள் சிறிது சேற்றுத் தன்மை கொண்டகடற்தாவரங்களைக் கொண்டவையாகவும் உள்ளன.

இந்நிலையில் வடமாகாணத்தைச் சூழவுள்ள கடற்கரைப் பிரதேசத்தினை பொதுவான ஓர் அடிப்படையில் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### கரையோரப் பாகுபாடு

1. கிழக்குக் கரையோரம் ஆழமான கடற்பரப்பையும் மணற்பாங்கான கடல் அடித்தளத்தையும், கரையோரத்தையும் கொண்டபகுதியாகும். இப்பகுதி பருத்தித் துறைக்குச் சற்று தெற்கில் இருநது ஆரம்பித்து முல்லைத்தீவு வரையும் நீண்டுள்ளது. பெரும் கப்பற் போக்கு வரத்திற்கும் வாய்ப்பான பகுதியாகும்.

2. யாழ். குடாநாட்டின் கரையோரம் பருத்தித்துறையிலிருந்து குடாநாட்டின் வடகரையின் மேற்கு எல்லைவரை நீண்டுள்ள பகுதியாகும். ஆழமான அதேவேளை கற்பாறைகளை அடித்தளமாகவும், கரையோரமாகவும் கொண்ட பகுதியாகும். இப்பகுதியில் கரையிலிருந்து 100 மீற்றருக்கும் - 200 மீற்றருக்கும் இடைப்பட்ட தூரத்தில் ஓர் தொடரான பாறை அமைப்பு கடற் பகுதியில் உள்ளது. ''சல்லிக்கட்டு'' அல்லது ''அடவி'' என உள்ளூரில் அழைக்கப்படும் இந்த அணை போன்ற பாறை அமைப்பு அக்கரையோரத்தின் பாதுகாப்பு அரணாகவுள்ளது. கப்பற் போக்குவரத்து நடைபெறுவதாயினும், கரையோரத்தை கப்பல்களோ, படகுகளோ வந்தடைய முடியாது. 'சல்லிக் கட்டில்' மனிதனால் உருவாக்கப்பட்ட ஒடுங்கிய பாறைகளின் வழியே கரையை அடைய முடியும்.

இதேவேளை சேந்தான் குளம் போன்ற மணற்பாங்கான சிறிய கடற்கரைப்பகுதியும் புறநடையாகவுள்ளது.

3. குடாநாட்டிற்குத் தொலைவிலுள்ள தீவுகளின் மேற்குக் கரையோரம்; படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தொலைவிலுள்ள தீவுகளின் மேற்குப்பாகக் கரையோரத்தில் பாறை அமைப்புக்களைக் கொண்டதாகவும் உள்ளது. இதேவேளை கடற்பரப்பு கரையோரத்திலிருந்துசிலநூறு மீற்றர் தூரத்திலேயே பெரும் ஆழமுடையதாகவுள்ளது.அத்தோடு சேற்றுத் தன்மை கொண்ட கடற்பரப்பாகவும் உள்ளது. 'அடவி' அல்லது 'சல்லிகட்டு' என அழைக்கப் படும்பகுதி காரைதீவு எழுவை தீவு, அனலைதீவு, நயினாதீவில் கரைக்கு மிகவும் அண்மையாகவும், புங்குடுதீவில் (தெற்கில்) சற்று விரிந்து பலநூறு கிலோ மீற்றர் வரையிலும் பரந்தும் விரிந்தும் உள்ளது.

கப்பல், படகு போக்குவரத்திற்கு ஏதுவானதாக இக்கடற்பரப்பு காணப்படினும், இக் கடற்பரப்புக்களில் இருந்து தீவுகளின் கரையை எட்டுவது மிகவும் சிக்கலானது ஆகும். மிக உயரமான 'சல்லிக்கட்டில்' பெரும் அலைகள் எழும்புகின்றன.

4. குடாநாட்டிற்கு அண்மையாகவுள்ள தீவுகளுக்கும் தொலைவிலுள்ள தீவுகளுக்கும்இடைப்பட்ட கடற்பகுதி; மணற்றிடல்களாகவும்,பாறை அமைப்பையும் கொண்ட நயினதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றின் கிழக்குக் கரைகளை அண்டி ஆழமாகவும், புங்குடுதீவின் வடக்கு லைடன் தீவின் மேற்குக் கரையை அண்டி ஆழம் குறைந்த கடற்பரப்பையும்கொண்ட நிலப்பகுதியாகும்.


இக்கடற்பரப்பிற்குள், காரைதீவு, எழுவைதீவு எழுவைதீவு-அனலைதவு, அனலைதீவு- நயினாதீவு, நயினாதீவு- புங்குடுதீவு ஆகியவற்றிற்கிடையில் இருக்கும் ஒடுங்கிய கடற்பகுதி ஊடாக பீரங்கிப் படகுகள், விசைப் படகுகள் உள் நுழையலாம். இதேவேளைபுங்குடுதீவிற்கும், லைடன் தீவிற்கும் இடையில் உள்ள கடற்பரப்பு அகன்றதாயினும் பீரங்கிப் படகுகள், விசைப்படகுகள் என்பன விரும்பிய வாறு உட்புக முடியாது

இதேவேளை இக்கடற்பகுதியில் தொலைவிலுள்ள தீவுகளின் எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றின் கிழக்குக் கரை ஓரத்தை அண்டியே பெரிய படகுகள் வசதியாக பிரயாணங்கள் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

5. குடாநாட்டிற்கும் அண்மையிலுள்ள தீவுப்பகுதிக்கும் இடையிலுள்ள கடற்பரப்பு; மிகவும் ஒடுங்கிய ஆழம் குறைந்த இக்கடற்பரப்புபெரும்பாலும் மணற்திட்டுகளும், சேற்றுத் தன்மை கொண்டதுமான பகுதியாகும். இப்பகுதியில் 'சாதாளை' (உயரமாக வளரும் கடற்தாவரம்) போன்ற கடற்தாவரங்களும் பெரியளவில் உண்டு. சிறிய படகுகள் மட்டுமே பயன்படுத்தலாம். அதிலும் கடலின் வற்றுப் பெருக்கு நிலைமைகள் படகுகளின் போக்குவரத்தைப்பாதிக்கக்கூடியவையாகும்.

6. யாழ்ப்பாணக் கடல் நீரேரி ஆழம் குறைந்த அதே வேளை மணற்பாங்கான தரை அமைப்பைக் கொண்டதாகும். ஓரளவு சிறிய படகுகளில் போக்குவரத்துச்செய்யக்கூடிய வாய்ப்பும் உண்டு.

7. வடமாகாணத்தில் பிரதான நிலப்பரப்பின் மேற்குக் கரை ஓரம் ஓரளவு ஆழமான அதேவேளை குடாநாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளுடன் ஒப்பிடுகையில் ஆழம் குறைந்த மணற்பாங்கானகடலடி தளத்தையும் கரையோரங்களையும் கொண்டபகுதிகளாகும் இத்தேவேளை இதன் வடபாகத்தில் கல்முனையைச்சூழ கடலடித்தளம் பாறைப்படை அமைப்புக் கொண்டதாகவும் கரையோரம் மணற்பாங்கான தன்மை கொண்டதாகவும் உள்ளன. படகுப் போக்குவரத்திற்கு பெரும இடைஞ்சல்கள் அற்ற பகுதிகளாகவும் உள்ளது. பாரிய கப்பல்கள் கரையோரம் வர முடியாது.




இலக்கத்திற்குரிய குறிப்புக்கள் கட்டுரையினுள் கொடுக்கப்பட்டுள்ளன.

### பருவக்காற்றின் பாதிப்பு

மேற்குறிப்பிட்டகரையோர இயற்கை அமைப்புகளுடன் வடகீழ்பருவககாற்றும் தென் மலேல்பருவக்காற்றும் இராணுவ நடவடிக்கைகளை ஓரளவு தீர்மானிக்கும் சக்தி கொண்டவையாகவும்உள்ளன

வடகீழ் பருவக் காற்று (வாடைக்காற்று) காலமான நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்கள் கிழக்குக் கரையோரமும், வடக்கு கரையோரமும் பெரும் கடல் கொந்தளிப்பு உள்ள பகுதிகளாகவும் கப்பல் படகு போக்கு வரத்திற்கு சற்று இடைஞ்சல் கொடுப்பவையாகவும் இருக்கும். இதே போன்று தீவுப்பகுதிகளின் மேற்கு தெற்கு கரையோரங்களிலும்பிரதான நிலப்பரப்பின் மேற்குக் கரையோரமும்தென் மேல் பருவக்காற்று (சோளகம்) காலமான மே, யூன், யூலை மாதங்கள்பெரும்அலைகள் கிளம்பும்மாதங்களாகவும் கப்பல், படகு போக்கு வரத்திற்கு சிரமம் கொடுப்பவையாகவும் உள்ளன.

### கடலின் வற்றுப் பெருக்கு

மேற்கூறப்பட்டவற்றைவிட கடலின் வற்றுப் பெருக்கு நிலையும்,இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கக் கூடியதாகும். கடலின் வற்றுப் பெருக்கானது குறிப்பாக யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் குதியிலும், யாழ். குடாவிற்கும், அண்மையிலுள்ள தீவுகளுக்கும் இடையில் உள்ள கடற்பரப்பிலும் போக்குவரத்தை தீர்மானிக்கும் சக்தியாகவுள்ளது. எனவே ஓரளவு பெரிய மீன்பிடி வள்ளங்கள கூட இதனால் பாதிப்படைகின்றன.

மேற் குறிப்பிட்ட கடற்பரப்பினது, கரையோரத்தினதும், பருவக் காற்றினதும், வற்றுப் பெருக்கினதும் தாக்கங்கள் வடக்கில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கடல் வழித் தாக்குதல்களாலும், தரையிறக்கங்களாலும் தாக்கத்தை விளைவித்ததனை அவதானிக்கலாம். அவர்களின் தோல்வி வெற்றி என்பனவற்றுடன் கடலின் பௌதிக அமைப்பும் சம்பந்தப்பட்டிருப்பதையும் காணலாம்.

### யாழ். கோட்டையில் இராணுவத்தின் தோல்வியும கடற்பரப்பும்

யாழ். கோட்டை இராணுவ முகாம் கடற்கரையோரமாக இருப்பினும், சிறிலங்கா இராணுவத்திற்கு அக் கடற்பரப்பு உதவி செய்யவில்லை கோட்டை இராணுவ முகாமைத் தக்கவைத்துக் கொள்ள இராணுவம் பெரும் முயற்சி எடுத்தும் பல இராணுவத்தினரின் உயிரைப் பலியிட்டும் தோல்வியாகவே முடிவுற்றது.

இதற்கான காரணங்களில் ஒன்று யாழ். கோட்டைப் பகுதியிலோ அன்றி கோட்டையைச் சூழவுள்ள பகுதியிலோ இராணுவத்தை கடல் வழிமூலம் தரை இறக்குவதற்கான வசதிகள் இருக்கவில்லை. இராணுவத்தினர் படகுகளில் தரைஇறக்குவதற்கு வசதியாக ஆழமான கடற்பரப்பு இருக்கவில்லை பீரங்கிப் படகுகள் விசைப்படகுகள் பிரவேசிப்பதற்கு வாய்ப்பும் இருக்கவில்லை இதற்குக் கடற்பரப்பு ஆழமின்றி இருந்தமையும்,சில ஒடுங்கிய வாய்க்கால் வழியாக பெரும் கடற்பரப்பில் இருந்து உட்பிரவேசிக்க வேண்டியிருந்தமையும் காரணமாகியது

கடற்பரப்பின் தன்மையையும் மீறி உட்பிரவேசித்த சில விசைபபடகுகளும் பீரங்கிப் படகுகளும் மணற்றிடலில் சிக்கிக் கொண்டதை இதற்கு உதாரணமாகத் தெரிவிக்கலாம்

அத்தோடு பெருக்குநீர் மட்டத்தோடு உட்பிரவேசித்த விசைப்படகுகள் நீர் வற்றிச் சென்றதால் அடுத்த பெருக்கு மட்டம் ஏற்படும் வரையும் காத்திருக்க வேண்டி வந்தது.

ஜெயராஜ்

இதே போன்றே கடந்த வருடம் பிற்பகுதியில் அராலிக் கடற்பகுதிக்குள் பிரவேசித்த சிறிலங்கா கடற்படையின் விசைப்படகும் மணற்திடலில் சிக்கிக் கொண்டமையையும் எடுத்துக் காட்டலாம்.

### இராணுவத் தரையிறக்கமும் பூகோளமும

வடக்கில் இடம்பெற்ற பெரும் சண்டையில் தமக்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது பல தரையிறக்கங்களை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டது

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலின் போது கள்ளப்பாட்டிலும், சிலாவத்துறை சண்டையின் போது முகாமிற்கு சற்றுதெற்கிலும் ஆனையிறவுச் சண்டையின் போது வெற்றிலைக் கேணி, கட்டைக்காட்டிலும், பூனகரி-சங்குப்பிட்டி தரையிறக்கம் கௌதாரிமுனை ஒரு கரைப் பகுதியிலும இடம்பெற்றன.

கடல்வழியாக மேற்கொள்ளப்பட்ட இத்தரையிறக்கங்கள் பெரும்பாலும் கரையோரப்பரப்பின் புவியியல் தன்மையை நன்கு அவதானித்தே மேற்கொள்ளப் பட்டன.

(6-ஆம் பக்கம் பார்க்க)

# லெபனான் கிராமங்களுக்குள் இஸ்ரேல் படை ஊடுருவல்

(பெய்ரூட்)

இஸ்ரேல் - லெபனான் எல்லையிலுள்ள கத்தா, யாக்கர் ஆகிய கிராமங்களுக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கிராமங்கள் ஈரான் ஆதரவு பெற்ற லெபனானிய ஹிஸ்புல்லா போராளிகள் வசம் இருந்து வந்தது.

ஹிஸ்புல்லா இயக்கத் தலைவர் அபாஸ் முஸாபி இஸ்ரேலியரால் கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேலியர்களை பழிக்குப்பழி வாங்கப் போவதாக இந்த இயக்கம் தெரிவித்திருந்தது.

இந்த இரு கிராமங்கள் மீதும் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 4 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது. ஹிஸ்புல்லா இயக்கத்தினர் வட இஸ்ரேல் மீது 300 க்கு மேற்பட்ட றொக்கெட்டுகளை ஏவியுள்ளனர் என்றும் நிமிடத்திற்கு 5 எறிகணைகளை ஏவினர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் சண்டைகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளதுடன் இருதரப்பினரையும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் படி கேட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் - லெபனான் எல்லைப்பகுதியில் நிலை கொண்டுள்ள ஐ. நா. சமாதானப்படை மீது தாக்குதலை நடத்திய பின்பு அவர்களை மீறியே இஸ்ரேல் இந்த கிராமங்களில் நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் இந்தச் செயல் அபாயகரமானது என ஐ நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

# தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான காலி இடங்கள் நிலவுகின்றன என்று கல்விச்சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு இக்காலி இடங்களை நிரப்பக் கல்விச்சேவைகள் அமைச்சு முடிவு செய்துள்ளது என்றும்,

இக்காலி இடங்கள் சம்பந்தமான விபரங்கள் நாடெங்கிலுமுள்ள கல்விக்கந்தோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்,

தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு இந்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் என்றும், தேசிய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதால் ஏற்படும் வெற்றிடங்களுக்குப் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரையோர சிங். உரிமைபேண 'ஹெலஉறுமய' திட சங்கற்பம்

சிங்கள சமூகத்தின் உரிமைகளைக் காக்க குறிப்பாக கீழ்நாட்டுச் சிங்களவரின் இழந்த உரிமைகளைப் பேணுவதற்கென்று உறுதியுடன் ஹெல உறுமய சிங்கள தேசிய பாரம்பரிய அமைப்பு அநுராதபுரத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. சிறி மகாபோதியையும் துட்டகைமுனுவினால் கட்டப்பட்ட ருவான் வெலி சாயாவிலும் நடைபெற்ற சத்தியாக் கிரகத்தில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பல எம். பிக்கள் கலந்து கொண்டனர்.

அநுராதபுரம் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி பிரேம்லால் திஸநாயக்காவின் வீட்டிலிருந்து இந்த எம். பிக்களும் அவர்களின் ஆதரவாளர்களும் ஊர்வலமாக அநுராதபுரம் புனித நகருக்குச் சென்றனர்.

சத்தியாக்கிரகம் ஆரம்பமாவதற்கு முன்னர் வண. ரத்மலான சிறி தம்ம, வண. விஜயபுர மகாநாம தேரர்கள் பன்சில் ஓதி தெய்வத்தின் ஆசி வேண்டி போதிபூசை நடத்தினார்கள்.

திருமலை மாவட்ட சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எம். பி. கே. என். குணவர்தனா பேசுகையில், அமைச்சர் தொண்டமானின் ஆலோசனைகள் தமிழர்களின் தேசிய பாரம்பரிய அமைப்பாகிவிடும். எங்களின் ஹெல உறுமய தேசிய இறைக்காகப் போராடும் என்றார்.

இந்த இயக்கம் சுதந்திரக் கட்சியின் ஆதரவைப் பெறவில்லையாதலால் இந்த இயக்கத்துக்கு எங்கிருந்து நிதி கிடைக்கின்றது என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்படுகின்றது.

# இலவச வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இலவசக் கல்வி வளர்ச்சிக் கழகம் சுன்னாகம் மைலணி மகாவித்தியாலயத்தில் இலவச வகுப்புகளை நடத்தவுள்ளது. ஆண்டு 7 முதல் பதினொன்று வரை வகுப்புகள் நடைபெறும் நாளை காலை 7 மணிக்கு இலவச வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் கலந்து கல்வி பயில விரும்பும் மாணவர்கள் நாளை ஆரம்பதினத்தன்று சமுகமளிக்கும்படி வலிகாமம் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# நாச்சிமார் கோவிலடியில் கடை உடைத்துத் திருட்டு

(குருநகர்)

யாழ். நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தவம் ஸ்ரோர்ஸ் நேற்று முன்தினம் புதன் இரவு உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள், ரொக்கப் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான முறைப்பாடொன்றை கடை உரிமையாளர் திரு. ஆறுமுகம் தவயோகராஜா தமிழீழக் காவல் துறைக்குக் கொடுத்துள்ளார்.

கடையின் பின்பக்கக் கதவை உடைத்து திருடர்கள் அரிசியை நிலத்தில் கொட்டிவிட்டு சாக்கில் பால்மா, சோப், பிஸ்கட், டொபி வகைகளையும், தேங்காய் எண்ணெய்யையும் திருடிச் சென்றுள்ளனர்.

கடையின் பின்பக்கம் திருடர்களால் எடுத்துச்செல்லப்பட்ட பொருள்களில் பிஸ்கட், சோப் அடங்கிய இரு பெட்டிகள் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. (21)

# வடபகுதிக்கு மின்சாரம்; முயற்சி நடக்கின்றதாம்

(கொழும்பு)

வடபகுதிக்குரிய மின் விநியோகத்தை துரிதப்படுத்துவதற்கு வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டிருக்கிறது.

திருத்த வேலைகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான மின்மாற்றிக்குரிய ஓயில் மிகவிரைவில் தரை மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விடயம் தொடர்பாகவும் யாழ். மாவட்டத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களையும் மின்மாற்றிக்குரிய ஓயிலையும் கப்பல் மூலமாக எடுத்து வருவது குறித்தும் யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகரும் மின்சாரசபை உயர் அதிகாரிகளும் கொழும்பில் பேசியுள்ளனர். மின் உபகரணங்களை எடுத்துவருவதற்கு தனியானதொரு கப்பலை ஒழுங்கு செய்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது (க)

# தடுப்பு முகாம்களில் ஆயிரம் ஜே.வி.பியினர் சத்தியாக்கிரகம்

[கல்கிசை]

கல்கிசை, கெலவல தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஜே.வி பி இயக்கத்தினர் சுமார் ஆயிரம்பேர் சென்ற செவ்வாயன்று முகாம் வளாகத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

பெரும்பாலான, ஜே வி.பியினர் கட்டடங்களுக்குள் கூடியிருந்து சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த சமயத்தில் சுமார் 150 பேர் கூரைகளின் மீது ஏறி, வெயிலையும் பொருட்படுத்தாது அங்கிருந்தபடியே சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தனர்.

அதிகாரிகள், பொலிஸார் வந்து சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டுக் கூரையிலிருந்து இறங்கும்படி கேட்டும் அவர்கள்கூரையிலிருந்துஇறங்கவோ சத்தியாக்கிரகத்தைக் கைவிடவோ மறுத்துவிட்டனர்.

கல்கிசையிலிருந்து வீரவிலையில் உள்ள தடுப்புமுகாமுக்கு இவர்கள் இடமாற்றம் செய்யப்படவிருப்பதை ஆட்சேபித்தே இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சத்தியாக்கிரகம் பற்றிய செய்தி எட்டியதும் கல்கிசைப் பொலிஸ் சுப்பிரின்டன் பெரேரா, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாந்திகுமார் முதலானோர்பொலிஸ் கோஷ்டியுடன் ஸ்தலத்திற்கு விரைந்து சம்பவங்கள் எதுவும் ஏற்படாத முறையில் பாதுகாப்பு நடவடிக்கையில் இறங்கினர். தீயணைக்கும் படையும் ஸ்தலத்திற்கு விரைந்தது.

# இரத்தினக்கல் வியாபாரிகடத்தல்

(பதுளை)

மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த கமயவெலவில் கடந்த 10 திகதி இரவு இரத்தினக்கல் வியாபாரி ஒருவர் கடத்தப்பட்டார். இனந்தெரியாத கோஷ்டி ஒன்று இவரைக் கடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

# பஞ்சாப் தேர்தல் முடிவுகள் இ. காங்கிரஸ் முன்னணியில்

[டில்லி]

பஞ்சாப் தேர்தலில் இந்திராகாங்கிரஸ்கட்சி முன்னணியில் நிற்கிறது. பஞ்சாப்பில் தனித்து ஆட்சி அமைக்கப் போவதாக இந்திராகாங்கிரஸ் அறிவித்துள்ளது.

117 ஆசனங்களைக்கொண்ட பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலில் இதுவரை அறிவிக்கப்பட்ட 70 முடிவுகளின்படி இந்திரா காங்கிரஸுக்கு 54 இடங்கள் கிடைத்துள்ளன.

வெகுஜன சமாஜக் கட்சிக்கு 5 இடங்களும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 3இடங்களும் கிடைத்திருக்கின்றன. மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்தையும். அகாலிதள் காபுல்பிரிவு 3 இடங்களையும் வென்றுள்ளன. சுயேட்சையாளர்கள் 2 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர். பாரதீய ஜனதாக்கட்சிக்கு 2 இடங்களும் கிடைத்துள்ளன.

இதேவேளை லோக்சபா தேர்தலில் இதுவரை 13 இடங்களில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

பஞ்சாப் தேர்தலில் 25 சதவிகித வாக்குகளே பதிவு செய்யப்பட்டன. இத்தேர்தலில் 5 லட்சம் பொலிசாரும், இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## தலைவர் பிரபாவின்

முறைத் திட்டங்களும் பலவீனப்பட்டுள்ளது. ஈடாட்டம் கண்டுள்ளது.

சற்றும் எதிர்பாராத திடீர்த் தாக்குதல்களைக் கொண்ட இப் போர்த் தந்திரமானது, சிறிலங்கா இராணுவத்தினருக்குப் பெரிய இழப்பை ஏற்படுத்தியதோடு, மனவுறுதி சிதைவடைந்து அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

மேற்படி போர்த் தாக்குதலானது கடலிலும், தரையிலும் மிகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நடைமுறையில் பெரு வெற்றியையும் சந்தித்து வருகின்றது. இதனால் சிறிலங்கா இராணுவத்தலைமைப்பீடம் திட்டமிட்டபடி தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு சிக்கலில் மாட்டியுள்ளது.

கடந்த நவம்பரிலிருந்து இம்மாத நடுப்பகுதி வரையுள்ள மூன்றரை மாதகாலப் பகுதியிலும் 30க்கு மேற்பட்டதாக்குதல்களைவிடுதலைப்புலிகள் வெற்றிகரமாகநடாத்திஉள்ளனர்.

இதில் 400 க்கு மேற்பட்ட சிறிலங்கா ஆயுதப் படையினர் கொல்லப்பட்டதுடன் 209 நவீன ஆயுதங்களையும். பல்லாயிரக்கணக்கான ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர். இதில் 100 போராளிகள் வீரச்சாவைச் சந்தித்துள்ளனர்.

யாழ். குடாநாடு மீது சிங்கள அரசு போர் மிரட்டலைத் தொடர்ந்து விடுத்தாலும் மக்கள் போருக்கு முகம் கொடுக்க தங்களை தயார்படுத்தியே வந்துள்ளார்கள் இது சிங்கள அரசை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இருந்த பொழுதும் இப்போதும் கூட குடாநாட்டின் மீதான படையெடுப்பு அபாயம் முற்றாக நீங்கிவிடவில்லை. அப்படியானதொரு முயற்சியை எதிரி எடுத்தால் தகுந்த பதிலடி கொடுக்கத் தயாராக இருப்போம் என்றும் விடுதலைப் புலிகள் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இல.

கானவிண்ணப்பங்கள்கோரப்படுமென்றும், போட்டி அடிப்படையில் இப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டபோதும் தகுதிபெற்ற வறிய மாணவர்களுக்கு சில இடங்கள் ஒதுக்கப்படுமென்றும்,

அரைவாசிப் புலமைப்பரிசில்கள் பெண்களுக்கென வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவு. தமிழ்

டுள்ள செட்டிகுளம் பகுதியில் இருந்து மற்றைய கிராமங்களைச் சுற்றிவளைக்க முயற்சிகளில் ஈடுபட்டபோதும் புலிகளின் தாக்குதலால் அவை நிகழவில்லை. அதனால் அங்கிருந்து எறிகணைத் தாக்குதலைநடாத்தி மக்களை வெளியேற்ற முயற்சி செய்வதாகத் தெரியவருகிறது.

# தமிழர்கள் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் புனர்வாழ்வுக்கடன் திட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வங்கிகளில் மேற்படி கடன்கோரி விண்ணப்பிக்கும் தமிழ் மீனவர்களுக்கு கடன் வழங்கப்படுவதில்லை என்றும் சொத்துப் பிணையினைசமர்ப்பிக்குமாறு இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவதாகவும், வீணான காலதாமதம் ஏற்படுவதாகவும் இப்பகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது. அதேவேளை சிங்கள மீனவர்களுக்கு ஒவ்வொன்றும் 14 லட்சம் ரூபா பெறுமதியான 26 பெரிய இயந்திரப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்கள் எவருக்கும் கடன் வழங்கப்படவில்லை என்றும் இச் சங்கம் வேதனை தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது